சேசுவின் இராச்சியம் வரும்படியாக மாதாவின் இராச்சியம் வருக!
- அர்ச். லூயிஸ் மரிய மோன்போர்ட்

"நீயாவது எனக்கு ஆறுதலளிக்க முயற்சி எடு."

மாதா பரிகார மலர்

மார்ச் & ஏப்ரல் - 2024
மலர் 45 இதழ் 3 & 4
வருடச் சந்தா ரூ. 150.00
தனிப்பிரதி ரூ.20.00



✝

JMJ

16-ம் வருட நினைவு

சங். அந்தோனி சேவியர் சுவாமி அவர்கள்

(ஸ்தாபகர், இயக்குநர், ஆன்மகுரு, பரிகார கன்னியர் சபை,
மாதா அப்போஸ்தலர்கள் சபை & மாதா அப்போஸ்தலர்கள்
மாதாவின் சூசை அச்சகம், மாதா பரிகார மலர்)

பிறப்பு 28.03.1925 குருப்பட்டம் 25.03.1952 இறப்பு 27.03.2008

சங்கைக்குரிய அந்தோனி சேவியர் சுவாமி அவர்கள்
மரித்து 16 வருடம் நிறைவுறுகிறது.
அவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக அனைவரையும்
ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவண்: மாதா அப்போஸ்தலர்கள் சபை & மாதா அப்போஸ்தலர்கள்,
ரோஸா மிஸ்திகா, சகாயமாதாபட்டணம், தூத்துக்குடி -2.

சேசுநாதரின் திருப்பாடுகளின் பரம இரகசியம்

பிரபஞ்சத்தின் அரசரும், ஆண்டவருமான தேவ திருச்சுதன், மனிதன் தன் பாவத்தால் நித்திய மரணத்திற்குத் தகுதி பெற்று விட்டதையும், தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ள வல்லமை யற்றிருந்ததையும் கண்டு, அவனை மீட்டு இரட்சிக்கும் பொறுப்பைத் தம் மீது சுமந்துகொண்டார் என்று அர்ச். அல்போன்ஸ் லிகோரியார் கூறுகிறார். இவ்வாறு மனிதன் சுதந்தரித்துக் கொண்ட தண்டனை யின் கடனைத் தம் மரணத்தின் மூலம் அவர் தம் பிதாவுக்குத் திருப்பிச் செலுத்தினார். அவர் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றவே திருப்பாடுகளுக்குத் தம்மை உட்படுத்தினார் என்றாலும், அதுவே அவரது திருச்சித்தமாகவும், ஏக்கமாகவும் இருந்தது. "நான் பெற வேண்டிய ஸ்நானம் ஒன்றுண்டு; அது நிறைவேறுமளவும் எவ்வளவோ நெருக் கிடைப்படுகிறேன்" (லூக். 12:50). பிதா ஈனப் பாவிகளாகிய நம்மை மீட்டு இரட்சிக்கும்படி தம் சொந்த மகனை மரணத்திற்குக் கையளித் தார். "தமது சொந்தக் குமாரன்மேல் முதலாய் இரக்கமில்லாமல், நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தார்" (உரோ. 8:32). இவ்வாறு தேவ பிதாவும், அவருடைய திருச்சுதனும் அற்பப் பாவிகளாகிய நம்மீது வைத்த சிநேகத்தை நிரூபித்தார்கள்.

"சர்வேசுரன் தம் வல்லமையைக் கொண்டு நம்மைப் படைத்தார்; தம்முடைய பலவீனத்தைக் கொண்டு நம்மை மீட்டு இரட்சித்தார்!" என்ற ஆச்சரியத்திற்குரிய வார்த்தைகளை அர்ச். அகுஸ் தினார் கூறுகிறார். ஏனெனில் சர்வ வல்லபராயிருந்தும், தேவ சுபாவத்தில் மட்டும் இருந்தபோது, தேவ சுதன் வேதனைப்பட முடியாதவராயிருந்தார். ஆனால், மனித பலவீனத்திற்குத் தம்மை உட்படுத்திக்கொண்டபோது, அவர் மனிதனின் இரட்சகராகவும் தம்மை ஆக்கிக்கொண்டார்.

ஆனால் இது எப்படி அவருக்கு சாத்தியமாயிற்று? பரலோகப் பூலோகப் பேரரசர் அசுத்தத் தில் நெளியும் புழுவையும் விட அதிக அசுத்தனாகிய மனிதனைக் காப்பாற்றும்படி இந்தச் சாக்கடைக்குள் இறங்க அவரைத் தூண்டியது எது? ஆ, வாக்குக்கெட்டாத தேவசிநேகமே! ஆ, மனிதனைத் தெய்வமாக்கும்படி, "புழுவாகத் தன்னையே தாழ்த்திக்கொண்ட" (சங்.21:6) உன்னத தேவ இலட்சணமே! "இதென்ன அதிசயம் ஆண்டவரே? பாவம் செய்தவன் நான்; தேவரீர் எதற்காகத் தண்டிக்கப்பட்டீர்!" என்று அர்ச். அகுஸ்தினார் கேட்கிறார்.

ஓ, இப்போது எப்பேர்ப்பட்ட பாரச் சுமை பரலோகத் திரு இரத்தத்தினால் இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனின் மீதும் சுமத்தப்பட்டிருக்கிறது! சர்வேசுரன் சர்வேசுரனாக மட்டுமே இருந்த போதும் கூட, தன்னைப் படைத்து, சுவாசிக்கக் காற்றும், உண்ணக் கனிகளும், நட்புள்ள மிருகங் களும், பறவைகளும், பூலோகம் முழுவதன் மீதும் ஆளும் அதிகாரமும் தந்தருளிய அவரை நேசிக்க மனிதன் கடமைப்பட்டிருந்தான். ஆனால் **திருப்பாடுகளின் பரம இரகசியம் நிறைவேறி விட்ட இப்போதோ, அவருக்குப் பதில் சிநேகம் காட்டவும், தன்னை மறுத்து, இரத்தந்தோய்ந்த அவருடைய பாதச் சுவடுகளைப் பின்பற்றவும், கடவுளுக்குச் சித்தமானால், அவருடைய அன்பிற்காகத் தன் உயிரையும் பலியாக்கவும் மனிதன் கடமைப்பட்டிருக்கிறான்.**

தேவ சுதனே, என் ஆண்டவரே, உமது இந்த அளவற்ற சிநேகம் எப்படிப்பட்டது? உம் சிந்தனையின் ஒரே ஒரு அசைவு மனுக்குலத்தை மீட்கப் போதுமாயிருந்ததே! விருத்தசேதனத்தில்

நீர் வடித்த இரத்தத்தின் ஒரே ஒரு துளியும், உமது ஒவ்வொரு மூச்சுக் காற்றும் கூட ஓராயிரம் உலகங்களை இரட்சிக்க வல்லதாயிருந்ததே! அப்படியிருக்க, நீர் மனித சாயலையே இழந்து போக என்ன அவசியம் வந்தது! உம்மைக் கட்டிய கயிறுகளுக்கும், சங்கிலிகளுக்கும், சம்மனசுக் களையும் பரவசப்படுத்திய உம் திருமுகத்தில் வழிந்த அசுத்தர்களின் எச்சிலுக்கும், திருச்சதை கிழிந்து துண்டுதுண்டாகப் பிய்ந்து விழச் செய்த கொடூரக் கசையடிகளுக்கும், தெய்வீகத் திருச்சிரசை ஊடுருவிய முட்களுக்கும், பாரச் சிலுவைக்கும், ஆணிகளுக்கும், மூன்று மணி நேர வாதைக்கும், உம் தாய்ச் செம்மறியின் ஆத்துமத்தை ஊடுருவ நீர் அனுமதித்த வியாகுல வாளுக்கும், உம் பிதாவிட மிருந்து முதன்முறையாகப் பிரிக்கப்பட்டு, ஒரு பாவியைப் போல் அவரை உம் கடவுளாகவே கண்டு கதறியதற்கும், கல்லறையின் இருளுக்கும் நீர் உம்மை உட்படுத்த வேண்டிய தேவை என்ன?

எங்களை மீட்க சகல இன்பங்களும் நிறைந்த பரலோகத்தையும், உம் பிதாவின் மடியையும் விட்டு, பாவத்தால் இறந்திருந்த இந்த அசுத்த உலகிற்கு இறங்கி வந்ததும், மூவுலகிலும் அடங்கா தவராயிருந்தும், முதலில் ஒரு கருவிலும், தம் வாழ்வு முழுவதும் ஓர் ஆறடி சரீரமாகிய சிறையிலும் உம்மை சிறைப்படுத்திக்கொண்டதும், பசி, தாகம், சோர்வு, வலி, வேதனை, ஏக்கம் என்பவை போன்ற சகல மனித பலவீனங்களுக்கும் உம்மை உட்படுத்திக்கொண்டதும் உமக்குப் போத வில்லையே! இவ்வளவு கொடூரத் துன்பங்களையும், அவமானச் சிலுவை மரணத்தையும் நீர் ஏற்றுக்கொள்ள வேண்டிய காரணம்தான் என்ன?

ஓ, ஏனெனில் தேவ-மனிதன் என்ற முறையில், தேவரீர் அளவற்ற விதமாய் எங்களை நேசித்து, உம்முடைய சிநேகத்தின் கடைசித் துளி வரை எங்களுக்குத் திறந்து காட்ட ஏக்கமாயிருந்தீர்! **"என் பிதாவானவர் அனுமதித்தால், ஒரே ஒரு மனிதனை மீட்டு இரட்சிக்க முதலாய் மீண்டும் சிலுவையில் அறையப்பட விரும்புகிறேன்!"** என்று அர்ச். ஜெர்த்ரூத்தம்மாளுக்கு தேவரீர் கூறிய வார்த்தைகள் இதை நிரூபிக்கின்றன! இதற்கு மேல் உம்மால் நேசிக்க முடியாது என்று நாங்கள் சொல்லத் துணியும் அளவுக்குத் தேவரீர் உம்முடைய அளவற்ற சிநேகமாகிய பெருவெள்ளத்தை முழுவது மாக எங்கள் மீது பாயச் செய்திருக்கிறீர்!

ஆனால் நான் என்ன செய்திருக்கிறேன்? சகல சிருஷ்டிகளிலும் அதிகக் கேடுகெட்டவனாகிய என்னை மீட்டு இரட்சிக்க உம் தெய்வீக உயிரைப் பலியாக்குமளவுக்கு என்னை நேசித்த உம் திரு இருதயத்தையும், என் அடைக்கலமாகத் தேவரீர் தந்தருளிய உம் திருத்தாயாரின் மாசற்ற இருதயத்தையும் முட்களைக் கொண்டு நிரப்பியதைத் தவிர வேறு என்ன நான் செய்திருக் கிறேன்? தேவரீர் எனக்காகச் சிந்திய திரு இரத்தத்தை வீணாக்கி, பசாசுக்கும், உலகத்திற்கும், கேடுகெட்ட என் சரீரத்திற்கும் அடிமையாயிருந்திருக்கிறேன்! ஓ, என் இரட்சணியத்திற்காக இவ்வளவையும் தேவரீர் செய்து முடித்த பிறகும், என் முழு இருதயத்தோடும், என் முழு ஆத்துமத்தோடும், என் முழு வல்லமையோடும் உம்மைச் சிநேகியாதிருப்பேனாகில் எனக்கு ஐயோ கேடு!

ஆயினும், என் தேவனே, இனி உம்மை நேசிப்பேன் என்று வாக்களிக்கிறேன். உத்தம மனஸ்தாபத்தை எனக்குத் தந்தருளும். இனி பாவம் செய்வதில்லை என்னும் என் பிரதிக்கினையை ஆசீர்வதித்தருளும். நான் மோட்சத்தை வந்தடையும் வரை, உம் பாதச் சுவடுகளைப் பின்பற்றவும், எதையும்விட அதிகமாய் உம்மை நேசிக்கவும், என் பாவங்களுக்குப் பரிகாரம் செய்யவும், என்னால் கூடுமான வரை, நன்மாதிரிகையாலும், ஜெப, தவத்தாலும், ஒறுத்தல், பரித்தியாகங்களாலும் அதிகமான ஆத்துமங்களை உம்மிடம் கொண்டு வந்து சேர்க்கவும் எனக்கு வேண்டிய வரப்பிரசாதங்களைத் தந்தருளத் தயை புரிவீராக!

வியாகுல மரியாயே, வாழ்க!

"பரிசுத்த குருத்துவத்தின் மேன்மை!"

- அர்ச். அல்போன்ஸ் மரிய லிகோரியார்

"குருத்துவத்தின் மகிமை படைக்கப்பட்ட மற்றெல்லா மகிமைகளுக்கும் அப்பாற்பட்டதாக இருக்கிறது. ''அது அரசர்கள், பேரரசர்கள், சம்மனசுக்கள் ஆகியோரின் எல்லா மகிமைகளையும் விட மேலானதாக இருக்கிறது" என்கிறார் அர்ச். பெர்னார்ட். இதற்கான காரணம், மனிதர்களின் உலக நன்மைகள் மற்றும் உடல்களின்மீது மட்டுமே அரசர்கள் அதிகாரம் செலுத்துகிறார்கள். ஆனால் குருவானவரோ மனிதர்களின் ஞான நன்மைகள் மீதும், அவர்களது ஆத்துமங் களின்மீதும் அதிகாரம் செலுத்துகிறார் என்பதுதான். சரீரத்தை விட ஆத்துமம் எவ்வளவு மேன்மையுள்ளதோ, அதே அளவுக்கு உலக அதிகாரங்களை விட குருக்களின் அதிகாரம் மேன்மை யுள்ளதாக இருக்கிறது.

உலக அரசர்களும் குருக்களைக் கனப்படுத்த வேண்டியவர் களாக இருக்கிறார்கள். "குருக்களைக் கனப்படுத்துவது நல்ல அரசனுக்கு அழகு" என்கிறார் பாப்பரசர் அர்ச். மார்செல் லினுஸ். பீற்றர் த ப்ளூவா என்பவர் தொடர்ந்து, "அவர்கள் கடவுளின் குருவானவருக்கு முன்பாக விருப்பத்தோடு முழந்தாளிடுகிறார்கள், அவருடைய கரங்களை முத்தமிடுகிறார்கள். அவருடைய ஆசீர்வாதத்திற்காகத் தலைவணங்குகிறார்கள்" என்கிறார்.

பரோனியுஸ் என்பவர் ஒரு சம்பவத்தை விவரிக்கிறார்: ட்ரிப்போலியின் ஆயரான லியோன் ஷியுஸ் என்பவரைக் காண விரும்பி, பேரரசி யுசேபியா அவருக்கு ஆளனுப்பியபோது, அவர் இரண்டு நிபந்தனைகளை விதித்தார். முதலாவதாக, தாம் வந்தவுடன் அவள் தன் அரியணையை விட்டு இறங்கி, தலைபணிந்து தம் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்; இரண்டாவ தாக, தாம் அரியணையில் வீற்றிருக்க வேண்டும், ஆனால் அவள் தம் அனுமதியின்றி அதில் அமரக்கூடாது, ஒருவேளை அவள் இந்த நிபந்தனைகளுக்குச் சம்மதிக்காவிட்டால், தாம் அரண் மனைக்கு வரப்போவதில்லை என்று அவர் தெரிவித்தார். பேரரசர் மாக்ஸிமுஸோடு உணவருந்த அர்ச். மார்ட்டின் அழைக்கப்பட்டபோது, அவர் பந்தியில் அமருமுன் முதலில் பேரரசரின் பரிபாலன குருவுக்கும், அதன் பிறகே பேரரசருக்கும் வணக்கம் செலுத்தினார். நீசே பொதுச் சங்கத்தில் பேரரசர் கான்ஸ்டண்டைன் எல்லா குருக்களுக்கும் பின்னால் கடைசி இடத்தில், அவர் களுடைய ஆசனங்களை விடத் தாழ்ந்த ஓர் ஆசனத்தில் அமர விரும்பினார். அவர்களது அனுமதி யின்றி அவர் அமரவும் விரும்பவில்லை. பரிசுத்த அரசரான அர்ச். பொலேஸ்லான் என்பவர் குருக்களை எந்த அளவுக்கு மதித்தார் என்றால், அவர்களுக்கு முன் அவர் அமரவும் துணியவில்லை.

குருத்துவ மகத்துவம் சம்மனசுக்களின் மகத்துவத்திற்கும் அப்பாற்பட்டிருக்கிறது, அவர்களும் குருத்துவத்திற்கு வணக்கம் செலுத்துகிறார்கள் என்று அர்ச். நாஸியான்ஸென் கிரகோரியார் கூறுகிறார். சம்மனசுக்கள் ஒரே ஒரு பாவத்தை முதலாய் மன்னிக்க இயலாதிருக்கிறார்கள். காவல் தூதர்கள் தங்கள் பொறுப்பில் ஒப்புவிக்கப்பட்டுள்ள ஆத்துமங்கள் குருவால் மன்னிக்கப்படும்படி அவரிடம் தஞ்சமடையத் தேவையான வரப்பிரசாதத்தைப் பெற்றுத் தருகிறார்கள். கட்டுதலும்,

கட்டவிழ்த்தலுமாகிய அதிகாரமும், பீடத்தில் தேவ திருச்சுதனை இறங்கச் செய்யும் அதிகாரமும் அவர்களுக்கு அல்ல, குருக்களுக்கே தரப்பட்டிருக்கின்றன.

மரிக்கிற ஒரு கிறீஸ்தவன் தம்மை மன்றாடும்போது, அர்ச். மிக்கேல் அதிதூதர் வந்து, பசாசுக் களை விரட்ட முடியும், ஆனால், குருவானவர் வந்து அவனை மன்னித்து, அவனுடைய பாவங் களிலிருந்து அவனை விடுவிக்கும் வரை, அவனது பாவக் கட்டுகளிலிருந்து அவனை விடுவிக்க அவரால் இயலாது. அர்ச். பிரான்சிஸ் சலேசியார் ஒரு பரிசுத்த துறவிக்குக் குருப்பட்டம் வழங்கியபின், அந்தத் துறவற குரு வாசலருகில் வேறு யாரோ வெளியே போக இடம் கொடுப்பவரைப் போல நின்று விட்டதைக் கண்டார். ஏன் அப்படிச் செய்தார் என்று அவர் துறவியிடம் கேட்டபோது, “என் காவல் தூதரைக் காணும் பேற்றைக் கடவுள் எனக்குத் தந்திருக்கிறார். முன்பெல்லாம் என் காவல் தூதர் என் வலது பக்கத்தில் இருப்பார், எனக்கு முன்பாகச் செல்வார். ஆனால் நான் குருப்பட்டம் பெற்றபின் அவர் என் இடப்பக்கத்திலேயே இருக்கிறார், எனக்கு முன் வெளியே செல்ல மறுத்துவிட்டார். யார் யாருக்கு முதல் மரியாதை தருவது என்பதில் எங்களுக்குள் போட்டி இருக்கிறது” என்று அறிவித்தார்.

“நான் ஒரு சம்மனசானவரையும், ஒரு குருவானவரையும் ஒரே நேரத்தில் எதிர்கொண்டால், முதலில் குருவுக்கும், அதன்பின்தான் சம்மனசுக்கும் முன்பாக முழந்தாளிடுவேன்” என்று அர்ச். பிரான்சிஸ் அசிசியார் வழக்கமாகக் கூறுவதுண்டு.

இறுதியாக, குருவானவரின் வல்லமை மகா பரிசுத்த கன்னிமாமரியின் வல்லமையையும் கடந்ததாக இருக்கிறது! ஏனெனில் தேவ தாயார் நமக்காக ஜெபிக்க முடியும், தன் ஜெபங்களால் தான் விரும்பிய எதையும் பெற்றுத் தர முடியும் என்றாலும், மிகச் சிறிய ஒரு பாவத்திற்கும் கூட அவர்களால் ஒரு பாவிக்கு மன்னிப்பளிக்க முடியாது. “திவ்ய கன்னிகை அப்போஸ்தலர்களை விட மகா பெரிய உத்தமதனமுள்ளவர்களாக இருந்தார்கள். ஆனாலும், அவர்களிடம் அல்ல, மாறாக, அப்போஸ்தலரிடம்தான் பரலோக இராச்சியத்தின் திறவுகோல்களை ஆண்டவர் ஒப்படைத் தார்” என்று பாப்பரசர் மூன்றாம் இன்னசெண்ட் கூறுகிறார். அர்ச். சியென்னா பெர்னார்தீன் மாதாவிடமே திரும்பி, “திவ்ய கன்னிகையே, என்னை மன்னித்து விடுங்கள், ஏனெனில் நான் உங்க ளுக்கு எதிராகப் பேசவில்லை. ஆண்டவர் உங்களுக்கும் மேலாக குருத்துவத்தை உயர்த்தியிருக் கிறார்” என்றார்!

இதற்கான காரணத்தையும் அவரே கூறுகிறார்: “திவ்ய கன்னிகை சேசுவை ஒரு முறைதான் கருத்தரித்தார்கள்; ஆனால் திவ்ய நற்கருணை வசீகரத்தின் மூலம், குருவானவர் தாம் விரும்பும் போதெல்லாம் அவரைக் கருத்தரிக்கிறார்.” “ஓ குருக்களின் அற்புத மகத்துவமே! திவ்ய கன்னிகை யின் திருவுதரத்தில் நிகழ்ந்தது போல், அவர்களுடைய கரங்களில் தேவ திருச்சுதன் மனிதனாய் அவதரிக்கிறார்!” என்று கூறி வியக்கிறார் அர்ச். அகுஸ்தினார். ஆகவேதான் குருக்கள் சேசுவின் பெற்றோர் என்று அர்ச். பெர்னார்டால் அழைக்கப்படுகிறார்கள். ஏனெனில் வசீகரிக்கப்பட்ட திவ்ய அப்பத்தில் அவரை உண்மையாகவே பிரசன்னமாகச் செய்கிற செயல்பூர்வ காரணமாக அவர்கள் இருக்கிறார்கள்.”

இவ்வாறு, அரசர்களும், சம்மனசுக்களும், தேவ மாமரியுமே கூட குருத்துவத்திற்கு மகிமை செலுத்துகிறார்கள் என்னும்போது, சாதாரண விசுவாசிகளும், அற்பப் பாவிகளுமாகிய நாம் எந்த அளவுக்கு மகிமை செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பது சொல்லாமலே விளங்குகிறது.

மரியாயே வாழ்க!

அர்ச். லிகோரியார் தம் குருப்பட்ட நாளில் எழுதி, வாழ்நாளெல்லாம் அனுசரித்த உறுதிமொழிகள்

"குருக்களின் மகிமைகளும், கடமைகளும்" என்ற புகழ் பெற்ற நூலை எழுதியவர் அர்ச். அல்போன்ஸ் லிகோரியார். இன்று கத்தோலிக்கத் திருச்சபையில் குருத்துவம் தன் மகிமையை இழந்து காணப்படுகிறது. அதை உரிய நிலைக்கு உயர்த்த வேண்டும். அதற்கு, அர்ச். லிகோரியார் தம் குருப்பட்ட நாளில் எழுதி, வாழ்நாளெல் லாம் அனுசரித்த பிரதிக்கினைகளை இன்றைய குருக்கள் அனுசரிப்பது மிக முக்கியம்:

உறுதிமொழிகள்

1. நான் ஒரு குரு. என் மகிமை சம்மனசுக்களிலும் மேலானது. ஆதலால் சம்மனசு களுக்குரிய பரிசுத்த வாழ்வை நான் வாழ வேண்டும். அதற்கு என்னாலான அனைத்தையும் நான் செய்வேன்.

2. என் குரலுக்குக் கடவுள் கீழ்ப்படிகிறார். ஆகவே அவர் எனக்குத் தரும் தேவ ஏவுதல்களுக்கும் என் அதிகாரிகளுக்கும் நான் கீழ்ப்படிய மிகப் பெரும் காரணம் உள்ளது.

3. திருச்சபை என்னைக் கௌரவித்துள்ளது. ஆகவே புனித வாழ்வாலும், ஆன்ம தாகத்தாலும், உழைப்பாலும் நான் என்னையே கௌரவிப்பேன்.

4. பரம பிதாவுக்கு அவரது திருக்குமாரன் சேசுவை நான் ஒப்புக்கொடுப்பதால் அந்த ஊழியத்திற்கு நான் தகுதிபெறும்படி சேசுவின் புண்ணியங்களால் என்னைப் போர்த்திக்கொள்வேன்.

5. கடவுளுக்கும், மனிதர்களுக்கும் மத்தியஸ்தராக என்னைக் கிறீஸ்தவர்கள் கொண்டுள்ளார்கள். ஆதலால் நான் எப்போதும் கடவுளின் வரப்பிரசாதத்திலும், நட்பிலும் இருப்பேன்.

6. கிறீஸ்தவர்கள் தாங்கள் கொண்டிருக்க வேண்டிய புண்ணியங்களின் மாதிரிகையாக என்னைக் காண விரும்புகிறார்கள். ஆகவே, எப்போதும், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நான் அவர்களுக்கு நன்மாதிரிகை காண்பிப்பேன்.

7. வரப்பிரசாத ஒளியை இழந்த பாவிகள் ஞான உயிர் பெற என்னிடம் வருகிறார்கள். ஆகவே, என் ஜெபங்களாலும், நற்போதனையாலும், நல்ல முன்மாதிரிகையாலும் அவர்களுக்கு உதவுவேன்.

8. உலகம், சரீரம், பசாசு ஆகியவற்றை வெல்ல தைரியம் தேவை. ஆகவே நான் தேவ வரப்பிரசாதத்தோடு ஒத்துழைத்து இந்த எதிரிகளை வெல்வேன்.

9. வேதத்தைக் காக்கவும், தப்பறையையும், அவபக்தியையும் எதிர்த்துப் போராடவும் நல்லறிவு தேவை. தேவையான அறிவைப் பெற இயன்றதையெல்லாம் செய்வேன்.

10. முகத்தாட்சணியமும், உலகத்தன்மையான நட்புறவுகளும் குருத்துவத்திற்கு இழுக்காகும். ஆதலால் அவற்றை விலக்குவேன்.

11. பேராசையும், சுயநலமும் குருக்கள் தங்கள் விசுவாசத்தை இழக்கச் செய்துள்ளன. தண்டனைத் தீர்ப்புக்குக் காரணமானவை என இவைகளை வெறுத்து ஒதுக்குவேன்.

12. ஒரு குருவின் பிறர்சிநேகம் கண்ணியமாயிருக்க வேண்டும். ஆதலால் நான் விவேகத்துடனும், சற்று ஒதுங்கியுமே பிறருடனும், விசேஷமாய்ப் பெண்களுடனும் நடந்துகொள்வேன்.

13. தேவ சிந்தனையுடனும், பக்தி வேகத்துடனும், உண்மையான புண்ணியத்துடனும் இருந்தால் கடவுளுக்குப் பிரியப்பட முடியும். ஜெபத்தை ஊட்டி வளர்க்கும் இவற்றை அடைய முயல்வேன்.

14. கடவுளின் மகிமையையும், ஆன்மாக்களின் ஈடேற்றத்தையும் என் உயிரைத் தந்தும் அடைய முயல்வேன்.

15. நான் ஒரு குரு. நித்திய குருவான சேசுவை நான் சந்திக்கும் அனைவரிடமும் மகிமைப்படுத்துவேன்.

அறிந்துகொள்வோம் பாத்திமா செய்தியை!

“நான் மோட்சத்திலிருந்து வருகிறேன்.”

1917, மே *13* அன்று நடந்த பாத்திமா மாதாவின் முதல் காட்சியில், “நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?” என்ற லூசியாவின் கேள்விக்கு மாதா, “நான் மோட்சத்தைச் சேர்ந்தவள்” என்று பதிலளித்தார்கள். உண்மையில், “நான் மோட்சத்திலிருந்து வருகிறேன்” என்று மாதா சொல்லியிருந்தாலும், அது உண்மையாகவே இருந்திருக்கும். ஆனால் ஆழ்ந்த பொருள் இருந்திருக் காது. ஆனால், “நான் மோட்சத்தைச் சேர்ந்தவள்” என்ற வார்த்தைகள் ஒரு வகையில், “பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே!” என்ற வார்த்தை களை நினைவுபடுத்துகின்றன. தேவமாதா, இரக்கங்களின் பிதாவிடமிருந்து தான் பெற்ற ஒரு விசேஷ வரப்பிரசாதத்தால், முழு உண்மையோடு, “நான் மோட்சத்தைச் சேர்ந்தவள்” என்று அறிக்கையிடத் தகுதி பெற்றிருக்கிறார்கள்.

திவ்ய கன்னிகை, அர்ச். லூயிஸ் த மோன்ட்போர்ட்டின் வார்த்தைகளின்படி, “தெய்வீக” மாமரியாகவும், “கடவுளின் தகுதியுள்ள தாயாராகவும்” இருக்கிறார்கள். சேசுநாதரைப் போலவே தானும் ஆதாமின் மகளாக இவ்வுலகில் தோன்றியிருந்தாலும், மாமரி ஒரு தெய்வீகத் தொடக்கத் தைக் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் பிதாவின் திருக்குமாரத்தியாகவும், சுதனின் திருத்தாயா ராகவும், இஸ்பிரீத்துசாந்துவின் அமல பத்தினியாகவும், தேவாலயமாகவும் இருக்கிறார்கள். விசேஷமாக, தன் அமல உற்பவத்தின் பலனாக, திவ்ய கன்னிகை, சேசுவுக்குப் பிறகு, “பூலோகத்தை, அதாவது மனுக்குலத்தைச் சேர்ந்தவர்களாக” ஆகுமுன்னமே, அவர்கள் “மோட்சத்தைச் சேர்ந்த” முதல் சிருஷ்டியாகவும், ஒரே சிருஷ்டியாகவும் இருந்தார்கள்.

திரியேக சர்வேசுரனுக்கு நேரடிச் சொந்தமானவர்கள் என்ற முறையில், ஆதியிலும், யுகங் களுக்கு முன்பும், திருச்சுதனின் மனிதாவதாரத் திட்டம் தெய்வீக மனதில் தோன்றிய அதே கணத் தில், திவ்ய கன்னிகை தேவ மனிதனுக்குப் பிறகு, அந்தத் திட்டத்தில் பங்குபெற நியமிக்கப்பட்ட இரண்டாவது ஆளாக இருந்தார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. இங்கே மனித புத்திக் கெட்டாததும், “எல்லா நாவுகளும் மவுனமாயிருக்க வேண்டியதுமான” ஒரு பரம இரகசியம் நிச்சயம் இருக்க வேண்டும். பரிசுத்த திருச்சபை தன் வழிபாடுகளில் அமல உற்பவக் கன்னிகைக் குப் பொருத்திக் கூறுகிற சர்வப்பிரசங்கி ஆகம வார்த்தைகள், விசேஷமாக, “நானே சிருஷ்டிகளுக் கெல்லாம் முந்தி சிருஷ்டிக்கப்பட்டேன்... ஆதியிலும், யுகங்களுக்கு முந்தியுஞ் சிருஷ்டிக்கப்பட் டேன்; எக்காலத்துக்கும் இராமலுமிரேன்” *(24:5, 14)* என்னும் வார்த்தைகள், அவர்களுடைய சிருஷ்டிக்கப்பட்ட நித்திய உற்பவத்தைப் பற்றிப் பேசுகின்றன என்று நாம் துணிந்து கூறலாம். இந்த வார்த்தைகள் நேரடிப் பொருளில் கடவுளின் ஞானத்தால் பேசப்படுகின்றன என்றாலும், அவை “சிருஷ்டிக்கப்பட்டேன்” என்ற வார்த்தையின்படி, தேவ திருச்சுதனைக் குறிப்பவையாக இருக்க முடியாது. ஏனெனில் அவர் “ஆதியிலும், யுகங்களுக்கு முன்னும்” சிருஷ்டிக்கப்பட்டவரா யிருந்தால், ஒரு தேவ ஆளாக இருக்க முடியாது. ”மேலும், தேவ ஞானம் சர்வேசுரனைப் போலவே நித்தியமானதாக இருக்கிற அவருடைய தேவ இலட்சணம் என்பதால், அது இந்த ஞானத்தையும் குறிக்க முடியாது. ஆகையால் இவ்வார்த்தைகள் திருச்சபை மறைமுகமாகக் குறித்துக் காட்டுகிற படி, நிச்சயமாக, படைக்கப்பட்ட ஓர் ஆளாக இருந்த திவ்ய கன்னிகையையே குறிக்கின்றன என்பது விளங்குகிறது. “சர்வேசுரனுக்குத் தாயாராக இருக்கிற மாதா, எப்போதுதான் அவருக்குத்

தாயாக இல்லாமல் இருந்தார்கள்?" என்ற அர்ச். கிறீசோலோகுஸ் அருளப்பரின் வார்த்தைகளின் காரணத்தையும் இந்த அடிப்படையில் நம்மால் யூகிக்க முடிகிறது.

இவ்வாறு, மாமரியின் வாக்குக்கெட்டாத பரம இரகசியம் முழுவதும், அவர்கள் பிதாவின் நேசத்திற்குரிய ஒரே மகளாகவும், வார்த்தையானவரின் தாயாகவும், இஸ்பிரீத்துவானவரின் தேவாலயமாகவும் இருப்பதும், "நான் மோட்சத்தைச் சேர்ந்தவள்" என்ற வார்த்தைகளில் வெளிப் படுத்தப்படுகிறது. ஏனெனில் மாமரி மனுக்குலத்தின் திவ்ய இரட்சகருக்குத் திருத்தாயாராகவும், ஒரு புதிய மனுக்குலத்தின் தாயாகிய புதிய ஏவாளாகவும் இருக்க நியமிக்கப்பட்டிருந்தார்கள். இவ்வாறு, "நான் மோட்சத்தைச் சேர்ந்தவள்" என்ற வார்த்தைகளில் மாமரியின் ஆள்தன்மை பற்றிய ஒரு மிக அன்னியோன்னியமான இரகசியம் நமக்கு அவர்களாலேயே வெளிப்படுத்தப் படுகிறது.

இவ்வாக்கியம் மசபியேல் செபியில், "நாமே அமல உற்பவம்!" என்னும் மனித புத்திக்கெட் டாத பரம இரகசியத்தின் அதிகாரபூர்வ பிரகடனத்தையும் நமக்கு நினைவுபடுத்துகிறது. நான்கு ஆண்டுகளுக்கு முன், அதாவது, 1854-ல், பாப்பரசர் ஒன்பதாம் பத்திநாதரால் விசுவாச சத்தியமாகப் பிரகடனம் செய்யப்பட்ட "அமல உற்பவ சத்தியத்தின்மீது" வைக்கப்பட்ட பரலோக முத்திரையாக இதைப் பலர் காண்கிறார்கள். அது உண்மைதான் என்றாலும், அர்ச். மாக்ஸிமிலியன் கோல்பே இவ்வாக்கியத்தைத் தேவ மாதாவின் தெய்வீகத்தின் வெளிப்பாடாகக் கண்டார். மாசற்ற, நித்திய, அமல உற்பவமாகிய இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனுடைய திருநாமத்தையே தேவ கன்னிகை தன் சொந்தப் பெயராகக் குறிப்பிட்டதன் மூலம், தன் தெய்வீகத் தாய்மைக்கும், மனுக்குலத் தாய்மைக்கும் முற்றிலும் அவசியமான விதத்தில், அவரோடு தான் ஒருபோதும் பிரிக்க முடியாத படி ஒன்றித்திருப்பதும், அவருடைய தெய்வீகத்தில் முழுமையாகப் பங்குபெற்றிருப்பதுமான பரம இரகசியத்தையே வெளிப்படுத்தினார்கள் என்று அவர் வலியுறுத்திக் கூறுகிறார்.

இறுதியாக, நம் தாய் மோட்சத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதால், இவ்வார்த்தைகளின் மூலம், இதே அழைப்பு நமக்கும் நம் அன்னையால் விடுக்கப்படுகிறது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். "மேலேயிருந்து வந்திருந்தவராகிய" (அரு.8:23) சேசுநாதரைப் போலவும், "மோட்சத்தைச் சேர்ந்தவளாகிய" அவருடைய திருமாதாவைப் போலவும் அன்றி, பாவம் செய்கிற எவனும் "இவ்வுலகத்தானாய்" இருக்கிறான். ஆனால் அவருடைய உண்மையான சீடர் களோ உலகத்தைச் சேராதவர்களாகவும் (அரு.15:19), பரலோகத்திற்கு உரியவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகவே, நம் ஆண்டவருடையவும், பாத்திமா மாதாவுடையவும் இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு, தேவ கட்டளைகளையும், பாத்திமாவில் நமக்குத் தரப்பட்ட பரலோக வழிமுறைகளையும், விசேஷமாக மரியாயின் மாசற்ற இருதய பக்தியையும் அனுசரித்து, மோட்சத்திற்குரியவர்களாய் ஆவோமாக, மோட்சத்தைச் சுதந்தரித்துக்கொள்வோமாக.

உங்கள் ஜெபங்களையும், பரித்தியாகங்களையும் எதிர்பார்க்கிறோம்!

உலக ஜெயராக்கினி மாதா ஆலய கட்டுமானத்திற்கு உங்கள் பரித்தியாகங்கள் தேவை. உங்கள் ஜெபங்கள் தேவை. நீங்கள் செய்கிற நல்ல புண்ணிய முயற்சிகள் தேவை. இவையே ஆண்டவரின் இரக்கத்தை நமக்குப் பெற்றுத் தரும். அவரும் தம்முடைய திருமாதாவின் வழியாக இந்த ஆலயத்தைக் கட்டியெழுப்புவார்.

எனவே, ஜெபியுங்கள், பரித்தியாகம் செய்யுங்கள். இதன் மூலம் உலக ஜெய ராக்கினி ஆலயம் விரைவில் கட்டி முடிக்கப்படும்.

அதிமேற்றிராணியார் மிக வந். லெஃபேவர் ஆண்டகை கொண்டிருந்த புனித உணர்வுகள்

1. அறிமுகம்: அதிமேற்றிராணியார் லெஃபேவரின் உணர்வு பற்றிப் பேசும்படி சுவாமி தெரேசியன் என்னிடம் கேட்டுக்கொண்டார். கிறிஸ்தவ உணர்வு, திவ்ய நற்கருணை உணர்வு, வேதபோதக உணர்வு என்னும் மூன்று வார்த்தைகளுக்குள் அதைச் சுருக்கிக் கூறிவிடலாம் என்று நான் நினைக்கிறேன்.

2. கிறீஸ்தவ உணர்வு:

அ. அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபையின் உணர்வு என்ன என்று ஒரு முறை அதிமேற்றிராணியாரிடம் கேட்கப்பட்டது. அவர் இப்படிப் பதிலளித்தார்: "எல்லாவற்றிற்கும் மேலாக, திருச்சபையின் உணர்வுதான் இந்தச் சபையின் உணர்வுமாகும். ஆகவே, அதன் உறுப்பினர்களும், குருக்களும், சகோதரர்களும், சகோதரிகளும், ஓப்லேட் சகோதரிகளும், மூன்றாம் சபையினரும், அர்ச். சின்னப்பரால் அவரது நிருபங்களில் விளக்கப்பட்டுள்ளபடி, **கிறீஸ்துநாதரின் பரம இரகசியத்தை மேலும் மேலும் அதிக நன்றாக அறிந்துகொள்ளப் பிரயாசைப்படுகிறார்கள்."**

ஆ. கிறீஸ்துவின் பரம இரகசியம் என்பதென்ன? நம் இரட்சணியத்திற்காகச் சிலுவையில் அறையுண்ட நேசமுள்ள கடவுள். அரு. *3:16:* "சர்வேசுரன் உலகத்தை எவ்வளவாக நேசித்தார் என்றால் தம்முடைய ஏக சுதனைத் தந்து, அவர்மேல் விசுவாசமாயிருக்கிற எவனும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படி அருளியிருக்கிறார்."

இ. கிறீஸ்தவ உணர்வைக் கொண்டிருத்தல் என்பது:

1. **ஆழ்ந்த விசுவாசத்தைக்** கொண்டிருப்பது:

அ. அவதரித்த வார்த்தையாகிய சேசுக்கிறீஸ்துவில்: "வார்த்தையானவர் மாம்சமானார்."

ஆ. அவர் நம்மீது கொண்ட அளவற்ற அன்பில் (1 அரு. 4:16): "சர்வேசுரன் நம்மேல் வைத்திருக்கிற நேசத்தை நாம் அறிந்து, விசுவசித்திருக்கிறோம்."

இ. இரட்சணியத்திற்கு அவரது மத்தியஸ்தம் அவசியம் என்பதில் (1 திமோ. 2:5): "சர்வேசுரன் ஒருவரே; கடவுளுக்கும் மனிதருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே; இவரே மனிதனான சேசுக் கிறீஸ்து."

2. **அடிக்கடி சேசுநாதரின் திருச்சிலுவையைத் தியானித்தல்:**

அ. அர்ச். சின்னப்பர் கூறுவதுபோல (1கொரி.2:2), "உங்களுக்குள்ளே நான் சேசுக்கிறீஸ்து நாதரை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் அறியாதிருக்கத் தீர்மானித்திருக்கிறேன்."

ஆ. மொன்சிஞ்ஞோர் (மார்சல் லெஃபேவர்): அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் உணர்வு:

1. "சபை உறுப்பினர்களின் எல்லா எண்ணங்களும், நாட்டங்களும், செயல்களும் விசுவாச உணர்வால் தூண்டப்பட வேண்டும். இனி, விசுவாச உணர்வு, அடிப்படையில் சிலுவையில் அறையுண்டவரும், மகிமைப்படுத்தப்பட்டவருமான சேசுநாதரைத் தியானிப்பது ஆகும்."

2. "சபையின் உறுப்பினர்கள் அனைவரும் தியான வாழ்வில், அதாவது, எளிமையோடும்,

பக்தியார்வத்தோடும் சேசுநாதரின் திருச்சிலுவையை உற்றுநோக்கிக்கொண்டிருப்பதில் தாகம் கொண்டிருப்பது எவ்வளவு விரும்பத்தக்கதாயிருக்கிறது!"

3. சேசுக்கிறீஸ்துவை நம் இருத்தலின் மையமாக ஆக்கிக்கொள்வது:

அ. பிலிப்.*1:21:* "ஏனெனில் கிறீஸ்துநாதர் எனக்கு ஜீவியம்; மரணம் எனக்கு ஆதாயம்."

ஆ. கலாத். *2:20:* "என்னைச் சிநேகித்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவ சுதனைப் பற்றும் விசுவாசத்தினாலே ஜீவிக்கிறேன்."

ஈ. சகல அர்ச்சியசிஷ்டவர்களையும், அர்ச். சின்னப்பரையும் பின்பற்றி, நம்மை நேசித்து, நமக்காகத் தம்மையே கையளித்தவரான சிலுவையில் அறையுண்ட சேசுவை நம் அந்தரங்க ஜீவியத்தின் மையமாக ஆக்கிக்கொள்ள அதிமேற்றிராணியார் லெஃபேவர் நம்மை அழைக்கிறார்.

உ. இப்போது, ஒரு கேள்வி எழுகிறது: இந்தக் கிறீஸ்தவ உணர்வை எப்படி வாழ்வது? நம் ஆன்மாக்களிலும், சமூகத்திலும் அரசாள, சிலுவையில் அறையுண்ட சேசுவுக்கு இருக்கும் மாபெரும் வழி என்ன? திவ்ய பலிபூசை! அதன் காரணமாக, திவ்ய நற்கருணை உணர்வு!

3. திவ்ய நற்கருணை உணர்வு:

அ. 1975-ல் இக்கோனில் பிரசங்கம்: "நாம் நம் முழு ஆத்துமத்தோடும், முழு இருதயத்தோடும் திவ்ய பலிபூசையைப் பற்றிக்கொள்ள வேண்டும், ஏனெனில் கடவுளின் அன்பு நமக்காகச் செய்துள்ளதை நாம் அதன் வழியாகத்தான் உண்மையாகவே அடைந்துகொள்வோம்."

ஆ. இதை எப்படிச் செய்வது? திவ்ய பலிபூசை சிலுவையின் வரப்பிரசாதங்களை நமக்குத் தருகிறது. வரப்பிரசாதமின்றி இரட்சணியமில்லை, பூசையின்றி வரப்பிரசாதமில்லை.

இ. ஒரு மேற்றிராணியார் பேசுகிறார்: "பூசையின் மாபெரும் பரம இரகசியத்தை நாம் ஒருபோதும் புரிந்துகொள்ள மாட்டோம். பூசை அனைத்திலும் முக்கியமான வேதச் செயல்பாடு மட்டுமின்றி, அது முழு கத்தோலிக்க போதகத்திற்கும் ஆதாரமாகவும், தனிமனிதன், குடும்பம், சமூக விசுவாசம், ஒழுக்க விதிகள் ஆகியவற்றிற்கு ஆதாரமாகவும் இருக்கிறது. கிறீஸ்தவ சமூகத்தை வாழவும், விரிவடையவும் அனுமதிக்கிற எல்லா வரப்பிரசாதங்களும் பீடத்தின்மீதுள்ள தொடர்ச்சியான சிலுவையிலிருந்தே பொழிகின்றன, இந்த ஆதாரத்தை வறண்டுபோகச் செய்வது, எல்லாப் பலன்களையும் அழித்து விடுவதாகும்."

ஈ. மொன்சிஞ்ஞோர் தம் தனிப்பட்ட அனுபவத்தைப் பற்றிப் பேசியதாவது (ஜூபிலிப் பிரசங்கம், *1979*): "திவ்ய பலிபூசையின் வரப்பிரசாதத்தால் என்ன சாதிக்க முடியும் என்று கண்டேன், நம் ஞான உபதேசிகளில் சிலராகிய பரிசுத்த ஆன்மாக்களில் அதை நான் கண்டேன். ஞானஸ்நான வரப்பிரசாதத்தாலும், திவ்ய பலிபூசை காண்பதாலும், திவ்ய நற்கருணையாலும் மாற்றமடைந்த அஞ்ஞான ஆத்துமங்கள் சிலுவைப் பலியின் பரம இரகசியத்தைப் புரிந்துகொண்டு, நம் ஆண்டவரின் சிலுவையின் துன்பங்களில் அவரோடு ஒன்றித்து, தங்கள் பரித்தியாகங்களையும், துன்பங்களையும் நம் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துவோடு ஒப்புக்கொடுத்து, ஒரு கிறீஸ்தவ வாழ்வு வாழ்வதை நான் கண்டேன்."

உ. இதனால்தான் லெஃபேவர் ஆண்டகை (சபையின் உணர்வு) இப்படிக் கூறினார்: "திவ்ய பலி பூசையாகிய நம் விசுவாசத்தின் மாபெரும் பரம இரகசியத்தை ஆழ்ந்து ஆராய்வதும், அதில் மட்டற்ற பக்தி கொண்டிருப்பதும், அதை நம் சிந்தனைகள், நம் இருதயங்கள், நம் முழு அந்தரங்க வாழ்வு ஆகியவற்றின் மையமாக ஆக்கிக்கொள்வதுமே திருச்சபையின் உணர்வின்படி வாழ்வதாகும்."

ஊ. **ஆனால் கிறீஸ்துநாதருடையவும், திவ்ய பலிபூசையினுடையவும் பரம இரகசியத்தைத் தியானிப்பது அவசியமான விதத்தில், ஆத்துமத்தில், அந்தப் பொக்கிஷத்தோடு தொடர்பு கொள்ளும் ஒரு பெரும் விருப்பத்தை எழுப்புகிறது; இதன் காரணமாக, வேதபோதக உணர்வு.**

4. வேதபோதக உணர்வு

அ. ஆவணங்கள்:

1. **அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் உணர்வு:** *"சிலுவையில் அறையுண்ட கிறீஸ்துவில்தான் ஜீவியத்தின் ஆதாரம் காணப்படுகிறது என்பதில் ஆழமான உறுதி பெற்றவர்களாக, சேசுவின் துளைக்கப்பட்ட திரு இருதயத்திலிருந்து பிறந்த நம் ஆண்டவரின் பரம இரகசிய மணவாளிக்கு, இந்த விலையேறப்பெற்ற உடன்படிக்கையை வழங்குவதைத் தவிர பெரிதான கவலை வேறு எதுவுமில்லை என்பதை மேன்மேலும் அதிகரிக்கும் மகிழ்ச்சியோடு கண்டுபிடிப்பார்கள்."*

2. **சபை விதித் தொகுப்பு:** *"திவ்ய பலிபூசையைப் போலவே, சபையும்* **அடிப்படையில் அப்போஸ்தலிக்கத் தன்மையுள்ளது.**" *அது "அயல்நாட்டு வேதபோதகப் பணிகளின் சபைக்கு ஒப்பான ஒரு சபையாகும்."*

3. அதிமேற்றிராணியார் வேதபோதகச் சபை ஒன்றின் உறுப்பினராக இருந்தார். அது இஸ்பிரீத்துசாந்து தந்தையர் சபையாகும். அவர் ஆப்பிரிக்காவில் தம் வாழ்வின் 30 ஆண்டுகளைச் செலவிட்டார். ஆறு ஆண்டுகளாக, அவர் தம் சபையின்அதிசிரேஷ்டராக இருந்தார்.

4. "Tradidi quod et accepi" - *"த்ராதிதி குவோத் எத் அக்சேப்பி" அதாவது, "நான் பெற்றுக் கொண்டதைக் கையளித்தேன்" என்று வார்த்தைகள் தம் கல்லறையின்மீது பொறிக்கப்பட வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.*

ஆ. கையளிக்கப்பட வேண்டியதென்ன?

1. ஆன்ம வாழ்வின் அஸ்திவாரமாகிய சேசுக்கிறீஸ்துவில் **விசுவாசம்***;*

2. **முழுமையான கிறீஸ்தவ வாழ்வு:**

அ. 1 கொரி. 13:2 : "மலைகளைப் பெயர்க்கத்தக்க எவ்வித விசுவாசத்தையுமுடையவனாயிருந்தாலும் என்னிடத்திலே தேவசிநேகமில்லாவிட்டால் நான் ஒன்றுமில்லை."

ஆ. யாக. 2:16: "விசுவாசம் கிரியைகளைக் கொண்டிராவிட்டால், தன்னிலே செத்த விசுவாசமாயிருக்கின்றது."

3. **பரிசுத்ததனத்தை அடையும் வழிகள்***:* மெய்யான தேவத்திரவிய அனுமானங்கள், ஆன்மீகம்.

சங். சுவாமி கோமிஸ், SSPX.

அதிமேற்றிராணியார் வந். மார்செல் லெஃபேவரின் 1974 பிரகடனம்

"கத்தோலிக்க விசுவாசத்தினுடையவும், இந்த விசுவாசத்தைப் பராமரித்துக் காப்பாற்ற அவசியமான பாரம்பரியங்களுடையவும் பாதுகாவலியான கத்தோலிக்க உரோமையோடு, ஞானத்தினுடையவும், சத்தியத்தினுடையவும் எஜமானியான நித்திய உரோமையோடு நம் முழு இருதயத்தோடும், நம் முழு மனதோடும் நம்மை உறுதியாகப் பிணைத்துக்கொள்கிறோம். மறுபுறத்தில், இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின்போதும், சங்கத்திற்குப் பிறகு, அதிலிருந்து வெளிப்பட்ட எல்லா நவீன மாற்றங்களின்போதும் தெளிவாக வெளிப்பட்ட நவீனவாத, ப்ரொட்டஸ்டாண்ட் மனநிலை கொண்ட உரோமையைப் பின்செல்ல நாம் எப்போதும் மறுத்தே வந்திருக்கிறோம்."

பாப்பரசருக்காக வேண்டிக்கொள்வோம்!

நம் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் புகழப்படுவாராக!

அன்பார்ந்த கத்தோலிக்க விசுவாசிகளே, சிறப்பாக நம் தாயாகிய திருச்சபை முன் எப்போதும் இல்லாத அளவில் நெருக்கடியில் சிக்கித் தவிப்பதைக் கண்கூடாகக் காணும் கத்தோலிக்கர்களே, அன்பார்ந்த கத்தோலிக்கத் தந்தையரே, தாய்மாரே, இளைஞர்களே, இளம் பெண்களே, அன்பார்ந்த மாசற்ற கத்தோலிக்கக் குழந்தைகளே, சிறப்பாக, திருச்சபையின் விலையேறப்பெற்ற ஞான முத்துக்களான அடைபட்ட வாழ்வு வாழும் துறவற சகோதர, சகோதரிகளே, சேசுவின் மகா பரிசுத்த இருதயத்தின் நேசர்களான அன்பார்ந்த கத்தோலிக்க குருக்களே, திருச்சபையில் நிலவி வந்த குழப்பம் அதன் உச்சிக்கே போய்விட்டது. இப்போது நாம் எஸ்தர் அரசியின் வார்த்தைகளைப் பயன்படுத்தி, "கர்த்தாவே, எங்களுக்கு உதவி புரிந்தருளும்; உம்மையன்றி வேறு துணை யாருமில்லை" (எஸ்.*14:3*) என்று மன்றாட வேண்டும். மரியாயின் மாசற்ற இருதயத்தில் அடைக்கலம் புகுவோம். பரிசுத்த பாப்பரசருக்காக அழுது மன்றாடுவோம். தாவீதரசரோடு சேர்ந்து, "ஆண்டவரே, எழுந்து வாரும். ஏன் நித்திரை பண்ணுகிறீர்? எங்களுக்கு உதவி புரிந்தருளும், எங்களை இரட்சியும்" (சங்.*43:22-25*) என்று கதறி மன்றாடுவோம்.

தேதி: *18:1.2024.*
(இராயப்பர் சிம்மாசனத்தின்
பாரம்பரியத் திருநாள்)

+ **அத்னேசியஸ் ஸ்நைடர்**
அஸ்தான் அதிமேற்றிராசனத் துணை ஆயர்.

பரிசுத்த பாப்பரசருக்காக மன்றாடுவோம்.

சுவாமி கிருபையாயிரும்;

கிறீஸ்துவே கிருபையாயிரும்;

சுவாமி கிருபையாயிரும்.

ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துவே, நீரே நல்ல மேய்ப்பர். நீர்தான் பல்வேறு காலங்களில் எழும்பும் புயலின் மத்தியில் பயணம் செய்யும் உமது கத்தோலிக்கத் திருச்சபையை உமது வலிய கரத்தால் வழிநடத்துகிறீர். பரிசுத்த பீடத்தைப் பரிசுத்த பாப்பரசர்களைக் கொண்டு அழகுபடுத்தும். அவர்கள் இந்த உலக சக்திகளைக் கண்டு மிரளாதவர்களாக இருப்பார்களாக. மாறி வரும் காலச் சூழல்களோடு சமரசம் செய்து கொள்ளாதவர்களாக இருப்பார்களாக. அவர்கள் கத்தோலிக்க விசுவாசத்தைப் பழுதுபடாமல் காத்து, உறுதிப்படுத்தி, அதைப் பாதுகாப்பவர்களாக இருப்பார்களாக. இப்பணியில், அவர்கள் இரத்தம் சிந்தவும் தயாராக இருப்பார்களாக. உரோமைத் திருச்சபையின் வணக்கத்திற்குரிய வழிபாட்டு முறைகளை அனுசரித்துப் பாதுகாத்து, தலைமுறைகள் தோறும் அதை ஒப்படைப்பவர்களாக இருப்பார்களாக. ஆண்டவரே, அப்போஸ்தலர்களின் ஆர்வத்தோடு பற்றியெரிந்த பரிசுத்த பாப்பரசர்களை மீண்டும் எங்களுக்குத் தந்தருளும். "**சேசுக்கிறீஸ்துநாதரால் அன்றி வேறு எவராலும் இரட்சணியம் இல்லை, காரணம் நாம் இரட்சணியம் அடைய வானத்தின் கீழ் அவரது நாமம் இன்றி வேறு நாமம் மனிதருக்குத் தரப்படவில்லை**" (அப்.நட. *4:12*) என்ற அப்போஸ்தலரின் படிப்பினையை உலகமனைத்திற்கும் பறை சாற்றுபவர்களாக இருந்த பரிசுத்த பாப்பரசர்களின் நாட்கள் மீண்டும் வருவனவாக. அதன் விளைவாக, கத்தோலிக்க அப்போஸ்தலிக்க விசுவாசத்தைப் பேணி வளர்க்கிற இல்லமாக பரிசுத்த பீடத்தை உருவாக்கும். உலகமனைத்திற்கும் சத்தியத்தைப் பறைசாற்றுகிற தீபமாகப் பரிசுத்த பீடம் மிளிர்வதாக.

ஆண்டவரே, கத்தோலிக்கத் திருச்சபையின் தாயாராகிய மரியாயின் மாசற்ற இருதயத்தின் பரிந்துரையால் எங்களுக்குப் பரிசுத்த பாப்பரசர்களைத் தாரும். அநேக பரிசுத்த பாப்பரசர்களைத் தாரும். எங்கள் பேரில் தயவாயிரும். எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும். ஆமென்.

அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை

உங்களை அழைக்கிறது!

"மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன்: நீ இராயாய் இருக்கிறாய்! இந்த இராயின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன், நரகத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ள மாட்டாது" (மத்.16:18).

பரிசுத்த திருச்சபைக்குப் பசாசின் தூண்டுதலால் ஆபத்துக்கள் வரும் போது, சர்வேசுரன் அதைக் காப்பாற்ற அப்போஸ்தலர்களின் தைரியமும், பரலோக ஞானமும் உள்ள பரிசுத்த ஆன்மாக்களை எழுப்புகிறார். விசுவாசத்தை அழிக்கும் முயற்சிகள் 2-ம் வத்திக்கான் சங்கத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டபோது, திருச்சபையையும், கத்தோலிக்க விசுவாசத்தை யும், பாரம்பரிய திவ்ய பலிபூசையையும், தேவத்திரவிய அனுமானங்களையும் பாதுகாத்து, இவ்வாறு தமது அதிமிக மகிமையையும், ஆன்ம இரட்சணியத் தையும் உறுதிப்படுத்த, வந். மார்செல் லெஃபேர் அதிமேற்றிராணியாரைத் தமது திருச்சபைக்கு ஆண்டவர் தந்தருளினார். இவர் ஏற்படுத்திய குருக்களுக்கான சபையே அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை ஆகும்.

கத்தோலிக்கக் குருத்துவத்தையும், அதைச் சார்ந்த காரியங்களையும் பாதுகாப்பதே இச்சபையின் உயரிய நோக்கம் ஆகும். சேசுநாதர்சுவாமி இக்குருத்துவத்தைப் பெரிய வியாழன் அன்று எதற்காக ஏற்படுத்தினாரோ, அதை நிறைவேற்றுவதே அந்த நோக்கம். "**இதை என் நினைவாகச் செய்யுங்கள்**" (லூக்.22:20) - இதுவே இந்தச் சபையின் சிறப்பான, உயரிய நோக்கமாகும்.

திவ்ய பலிபூசையை ஒவ்வொரு கணமும் தங்கள் வாழ்வில் வாழும் அர்ச்சியசிஷ்ட குருக்களை உருவாக்கி, கத்தோலிக்கத் திருச்சபைக்கு அளிப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். எனவேதான் பாரம்பரிய திவ்ய பலிபூசை நிறைவேற்ற, அதன்படி வாழ, இன்னொரு சேசுவாக வாழ இக்குருக்கள் அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் இப்படி வாழ்வது மிகவும் அவசியம். அது மட்டுமே விசுவாசிகளும் அர்ச்சியசிஷ்ட தனத்தில் வளர உதவும். பூசை மட்டுமே அனைத்து வரப்பிரசாதங்களுக்கும் ஊற்றாகத் திகழ்கிறது.

நித்திய குருவான சேசுநாதரின் விசேஷ பாதுகாவலில் இச்சபை ஒப்படைக்கப்பட்டுள்ளது. குரு இன்னொரு கிறீஸ்துவாக, பலிபீடத்தில் சேசுவோடு பலியாவது இதன் சாராம்சம் ஆகும். அடுத்ததாக, நித்திய குருவின் தாயாராகிய நம் தேவ தாயைத் தனது குருக்களில் "**சேசுவை உருவாக்க**" தன் விசேஷ பாதுகாவலி யாக இச்சபை கொண்டுள்ளது. உத்தம விரத்தத்துவத்தின் மேன்மை மற்றும் காரணங்களை உணர்ந்து, சேசுவை மட்டுமே நேசிக்கும் இன்னொரு அர்ச். அருளப்பரை இவர்களில் தேவமாதா உருவாக்குகிறார்கள். சுருங்கக் கூறினால், நம் தாய்த் திருச்சபையை நேசிக்கும் பரிசுத்த குருக்களை உருவாக்கி, அவர்களை தேவசிநேகத்திலும், பிறர்சிநேகத்திலும் வளரச் செய்து, பூசையை மேன்மையுடன் நிறைவேற்றி, அர்ச்சியசிஷ்டதனத்தில் அவர்களை உறுதிப்படுத்துவதே வந். லெஃபேர் ஆண்டகையின் உன்னத நோக்கமாக இருந்தது; அதுவே சபையின் நோக்கமாகவும் இருக்கிறது.

சேசுவை ஆன்மாக்களிடம் கொண்டு செல்வதும், அவற்றை இரட்சிக்கும்படி அவற்றை சேசுவிடம் கூட்டி வருவதுமான ஒப்பற்ற அப்போஸ்தல அலுவலை மேற்கொள்ள விரும்பும் கத்தோலிக்க இளைஞர்கள் உறுதி யான விசுவாசத்தையும், திருச்சபையையும் காக்கவும், நவீனத்தை அழிக்கவும் உழைக்க விரும்பினால், இச்சபையின் இந்திய சிரேஷ்ட குருவை அணுகும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அனைத்தையும் கிறீஸ்துவுக்குள் புதுப்பிக்க!"

The Prior, Society of St. Pius X,
84/3 Annie Nagar, Seevalaperi Road, Palayamkottai - 627 002.
Ph: 0462 - 2586201. Email: mission.india@fsspx.asia

இளம் கன்னியரே!

சேசுவின் திரு இருதயத்திற்கு ஆறுதலளிக்கும் சகோதரிகளின் சபை

உங்களை அன்புடன் அழைக்கிறது.

எங்கள் சபை, திருப்பாடுகளின் சபைக் குரு, சங். சுவாமி பெஸிலியோ ரொஸாட்டி என்பவரால் இத்தாலி யில் 1961-ம் ஆண்டு அதிகாரபூர்வமாக ஸ்தாபிக்கப்பட்டது. சேசுவின் திரு இருதயத்திற்கு, விசேஷமாக, அவருக்கு மிகப் பிரியமான, அவரது விலைமதிக்கப்படாத திரு இரத்தத்தால் இரட்சிக்கப்பட்ட மிக அநேக ஆத்துமங்களின் நன்றியற்றதனம், குளிர்ந்த தன்மை, நிந்தை, துரோகங்களால் கடும் வேதனைப் படுத்தப்படுகிற அந்தத் திரு இருதயத்திற்கு, ஆறுதல் தருவது என்ற ஏக்கத் தீயை அவர் எங்களில் மூட்டினார். 1996 ஆகஸ்ட் 23 அன்று தமது மரணத்திற்கு முன், சுவாமி பெஸிலியோ தம் சபையை வழிநடத்தச் சம்மதித்த அர்ச். பத்தாம் பத்திநாதர் சபைக் குரு, சுவாமி எம்மானுவேல் த்யூ ஷலார்த் என்பவரிடம் சகோதரி களை ஒப்படைத்தார். சுவாமி எம்மானுவேல் தமது சபையோடு எங்களுக்குத் தொடர்பு ஏற்படுத்தித் தர, இந்தச் சபை ஒவ்வொரு நாளும் எங்களுக்காகப் பூசை நிறைவேற்றுவதன் மூலமும், புனித வேதசாஸ்திரம், நல்லொழுக்கம் மற்றும் தவ வாழ்வுக்குரிய விதிமுறைகளைக் கற்றுத் தருவதன் மூலமும் ஞான ரீதியாக எங்களை வளர்த்து வருகிறது.

2008-ல் இந்திய சகோதரிகளில் ஒருவர் இத்தாலியில் தம் வார்த்தைப்பாடுகளைத் தந்தபின், இந்தியா வுக்குத் திரும்பி வந்தார். அவர் மூலம் பாளையங்கோட்டையில் சபையின் மடம் ஒன்று தொடங்கப்பட்டது. இவ்வாறு, பாளையங்கோட்டையில் நாங்கள் எட்டு சகோதரிகளைக் கொண்ட ஒரு துறவறக் குடும்பத்தைக் கொண்டிருக்கிறோம்.

எமது சபை நோக்கம்: கடவுளின் மகிமையும், சகோதரிகளின் அர்ச்சிப்புமே எங்கள் பொதுக் குறிக்கோள் ஆகும். சேசுவின் திரு இருதயத்திற்கு ஆறுதல் தருவதும், திரு இருதய பக்தியை வளர்ப்பதும், அர்ச். மார்கரீத் மேரி அலாக்கோக் கற்பித்தபடி சேசுவின் திரு இருதயத்தை எங்கள் இருதயங்களின் ஆண்டவராக ஆக்குவதும் எங்கள் விசேஷ குறிக்கோள் ஆகும். சகோதரிகள் குருத்துவ அழைத்தலுக்காகவும், குருக்களின் அர்ச்சிப்பிற்காகவும் ஜெபிக்கிறார்கள்.

இந்தியாவில் எங்கள் அப்போஸ்தலிக்க ஊழியம், அநாதைக் குழந்தைகளையும், கைவிடப்பட்ட வயோதிகப் பெண்களையும் பராமரிப்பது ஆகும். நாங்கள் முதிய, கைவிடப்பட்ட பெண்களையும், அனாதைச் சிறுமிகளையும் பராமரித்து வருகிறோம். இந்தக் குழந்தைகள் நூறு மடங்கு கனிகளைப் பிறப் பித்து, அதன் மூலம் சேசுவின் திரு இருதயத்திற்கு ஆறுதல் அளிக்கும்படி அவர்களது இளம் இருதயங்களில் தேவ வார்த்தையாகிய நல்ல விதையை விதைக்க நாங்கள் ஆர்வத்தோடு உழைக்கிறோம்.

கடவுளுக்கு மகிமையளிப்பதே எங்கள் முக்கிய நோக்கமாக இருப்பதால், நாங்கள் ஒவ்வொரு நாளும் கட்டளை ஜெபம் (காலை ஜெபம், மதிய ஜெபம் மற்றும் இரவு ஜெபம் ஆகியவற்றைச்) சொல்கிறோம். ஒரு மணி நேரம் தியானம் செய்கிறோம். நாங்கள் சேசுவின் திரு இருதயத்தின் ஒன்பது கட்டளை ஜெபங்களைச் சொல்கிறோம். **"சேசுவின் திரு இருதயமே, உம்மை நேசிப்பதும், நீர் நேசிக்கப்படும்படி செய்வதும்"** என்ற எங்கள் விருதுவாக்கு எங்கள் சபையின் ஒட்டுமொத்த உணர்வையும் சுருங்கக் கூறுகிறது.

தங்களைக் கடவுளுக்குக் கையளித்து, சேசுவின் திரு இருதயத்திற்கு ஆறுதல் அளிக்கவும், கன்னியர் மடத்தில் வாழவும் ஆர்வமிருப்பவர்கள் பின்வரும் முகவரியில் சபைத் தாயாரைத் தொடர்பு கொள்ளவும்:

Sr. Mary Immaculate, Mother Prioress,
Consoling Sisters of the Sacred Heart,
6/128 Servi Domini Orphanage,
Opp. Govt. H.S. School, Burkitmanagar - 627 351,
Tirunelveli.
Ph: 0462 2583255; Mobile: 89031 59283.

மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு ஆறுதலளிக்கும் கன்னியர்கள் சபை

"என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? ஜெபியுங்கள், அதிகமாக ஜெபியுங்கள். சேசு மரியாயின் இருதயங்கள் இரக்கமுள்ள திட்டங்களை உங்களுக்கென வைத்துள்ளார்கள்."

மாமரியின் புதல்வியரே!

"நம் அன்னையின் கையில் முட்களால் சூழப்பட்ட ஓர் இருதயம் இருந்தது. அம்முட்கள் அவ்விருதயத்தை ஊடுருவிச் சென்றன. மனுக்குலத்தின் பாவங்களால் நிந்திக்கப்படும் மரியாயின் மாசற்ற இருதயம் அது."

"உன் மிகப் பரிசுத்த அன்னையின் மாசற்ற இருதயத்தின்மீது இரக்கப்படு. பரிகார முயற்சிகள் செய்து அவற்றை அகற்றுவதற்கு யாருமில்லை" என்று சேசு பாலன் லூசியாவிடம் கூறினார்.

"ஜெபியுங்கள், அதிகமாக ஜெபியுங்கள். பாவிகளுக்காக ஒறுத்தல் முயற்சிகள் செய்யுங்கள். ஏனெனில் தங்க ளுக்காக ஜெபித்து, ஒறுத்தல் செய்ய ஒருவரும் இல்லாததால் அநேக ஆன்மாக்கள் நரகத்திற்குச் செல்கிறார்கள்."

இது நம் அன்னையே நமக்கு விடுக்கும் அழைப்பு. பாத்திமா குழந்தைகளைப் போல நாமும் நம் தாயின் மாசற்ற இருதயத்தை நேசித்து, நம்மை முழுவதும் சேசு மரிய இருதயத்திற்கு அன்புப் பரிகாரமாக ஒப்புக்கொடுப்போம்.

எமது சபையின் நோக்கம்

தூத்துக்குடி மேற்றிராசன குருவாகிய எங்கள் ஸ்தாபகர் சங். அந்தோனி சேவியர் சுவாமியவர்களால் எங்கள் சபை 2004-ல் தொடங்கப்பட்டு, 2013-ல் அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையால் அங்கீகரிக்கப்பட்டது. சேசு மரிய இருதயங்களுக்கு எதிராகச் செய்யப்படும் பாவங்களுக்குப் பரிகாரம் செய்வது, குருக்களின் அர்ச்சிப்பிற்காகவும், குருத்துவ, துறவற அழைத்தல்கள் பெருகவும், தவறிப் போன குருக்கள் தங்கள் பிதாவிடம் திரும்பி வரவும், மரியா-யின் மாசற்ற இருதயம் விரைவில் வெற்றி பெறவும் ஜெபித்து, பரிகாரம் செய்வது எங்கள் சபையின் நோக்கமாகும்.

அப்போஸ்தல அலுவல்:

சேசு மரியாயின் திரு இருதய பக்தி உலகெங்கும் பரவ ஜெபிப்பதும், குறிப்பாக, திருச்சபையின் கட்டளை ஜெபங்கள், தலை வெள்ளி, முதல் சனி பக்தி முயற்சிகளை அனுசரிப்பதும், எங்கள் பாவங்களுக்கும், சகல மனிதர்களின் பாவங்களுக்கும் பரிகாரம் செய்வதும், பாவிகள் மனந்திரும்பவும், கத்தோலிக்கப் பாரம்பரியம் திரும்பி வரவும் ஜெபிப்பதும், ஞான உபதேசம் கற்பிப்பதும், மற்றவர்களை ஜெபிக்கவும், பரிகாரம் செய்யவும் தூண்டுவதும் எங்கள் அப்போஸ்தல அலுவலாகும்.

பிற அலுவல்கள்:

மரியாயின் ஜெபமாலை மற்றும் கார்மெல் உத்தரியம் தயாரிப்பது, பாரம்பரிய பலிபூசைக்கு உபயோகிக் கப்படும் பீடத்துணிகளைத் தயாரிப்பது.

"**நீயாவது எனக்கு ஆறுதலளிக்க முயற்சி எடு**" என்ற நம் அன்னையின் குரலுக்குக் கீழ்ப்படிந்து, அவர்களை ஆறுதல்படுத்த விரும்பும் தாராளமுள்ள இளம் உள்ளங்கள் கீழ்க்கண்ட முகவரியில் எங்களோடு தொடர்பு கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

கல்வித் தகுதி: + 2 முடித்தவர்கள், பட்டதாரிகள். (இவர்கள் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும்.)

வயது : 18 முதல் 35 வரை.

எங்கள் முகவரி:
Mother Prioress, Reparation Sisters of the Immaculate Heart of Mary,
No. 18, Ravi Shankar Nagar Extension, K.T.C. Nagar, Palayamkottai, Tirunelveli - 627 011.
Mobile No. : 9698124004.

மாதா அப்போஸ்தலர்கள் சபை

(SOCIETY OF APOSTLES OF MARY)

இளைஞர்களை அன்புடன் அழைக்கிறது.

"**நீயாவது எனக்கு ஆறுதலளிக்க முயற்சி எடு**" என்ற பாத்திமா மாதாவின் வேண்டுகோளின்படி, கல்வாரியின் அடியில் நின்ற வியாகுல மாதாவின் மாசற்ற இருதயத்தைக் குத்தி ஊடுருவிய கொடிய வேதனைக்குப் பரிகாரமாக, அதற்கு ஆறுதலளிக்கும் நோக்கத்துடன் வாழ்வதும், அதன் மூலம் அர்ச்சிப் படைவதும், மரியாயின் மாசற்ற இருதய பக்தியைப் பரப்புவதும், நவீனமாகிய அசுத்தப் பிரளயத்திலிருந்து விசுவாசிகளைக் காப்பதும், அவர்களை மோட்சத்தை நோக்கி வழிநடத்தும்படி அநேக மாதா அப்போஸ்தலர் களை உருவாக்கி, அவர்கள் சேசு மரிய இருதயங்களுக்கு ஆறுதலளிக்கச் செய்வதுமே மாதா அப்போஸ் தலர்கள் சபையின் முதன்மையான நோக்கமாகும். இதற்காகவே 1999-ம் ஆண்டில், தூத்துக்குடி மேற்றி ராசன குருவான சங். அந்தோனி சேவியர் சுவாமியவர்களால் இச்சபை தொடங்கப்பட்டது. சேசு மரிய இருதயங்களை நேசிப்பதும், மற்றவர்களை நேசிக்கத் தூண்டுவதுமே இச்சபையின் குறிக்கோளாகும்.

1. ஜெபக் கடமைகள்:

- ❖ நாள்தோறும் பாரம்பரிய திவ்ய பலிபூசையில் பங்கேற்பது;
- ❖ தினமும் கட்டளை ஜெபம் (காலை, மதியம், இரவு) ஜெபிப்பது;
- ❖ தினமும் 153 மணி (சந்தோஷ, துக்க, மகிமை தேவ இரகசியங்கள்) முழு ஜெபமாலை ஜெபிப்பது;
- ❖ தினமும் காலையில் 30 நிமிடங்கள் தியானம் செய்வது.

2. மற்ற கடமைகள்:

- ❖ மாதா பரிகார மலர் பத்திரிகையை வெளியிடுவது;
- ❖ பாரம்பரிய கத்தோலிக்கப் புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுவது (ஆன்மீகம், தேவமாதா, அர்ச்சியசிஷ்டவர்கள் மற்றும் கத்தோலிக்க ஞான உபதேசப் புத்தகங்களை வெளியிடுவது.);
- ❖ சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும் ஞான உபதேசம் கற்பிப்பது;
- ❖ தலைவெள்ளி, முதல் சனி பக்தியைக் கடைப்பிடிப்பது, பரப்புவது;
- ❖ ஆண்களையும், பெண்களையும் அர்ச். லூயிஸ் மரிய மோன்போர்ட் முறைப்படி 33 நாள் தயாரிப்பைச் செய்ய உதவி செய்து, அவர்களை மாதா அப்போஸ்தலர்களாக உருவாக்குவது;
- ❖ சேசு மரிய இருதயங்களுக்கு நிந்தைப் பரிகாரம் செய்யத் தூண்டுவது.

தேவமாதா வழியாக:

"உன் சர்வேசுரனாகிய ஆண்டவரை உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமத்தோடும், உன் முழு மனதோடும், உன் முழு பலத்தோடும் சிநேகிப்பாயாக. உன் பிறனையும் உன்னைப் போலவே நேசிப்பாயாக" என்னும் ஆண்டவரின் கட்டளையை நிறைவேற்றுவது.

முழு ஆர்வம் உள்ளவர்கள் கீழ்க்கண்ட முகவரியைத் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

SOCIETY OF APOSTLES OF MARY

C/o Rev. Fr. Prior, Society of St. Pius X 84/3, Annie Nagar, Seevalaperi Road, Palayamkottai - 627 002. Ph: 0462 - 2586201 Email: mission.india@gmail.com	11/519, Sahayamatha Pattanam, 2nd Street, Tuticorin - 628 002. Ph: 0462 2361989. Mobile: 94876 09983 Email: tutirosamystica@gmail.com

மங்கள வார்த்தை: வார்த்தையானவர் மாம்சமானார்.

(அர்ச். அல்போன்ஸ் லிகோரியாரின் 'மரியாயின் மகிமைகள்' என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.)

நம் ஆண்டவர் உலகத்தை மீட்டு இரட்சிக்கும்படி மனிதனாக விரும்பியபோது, அவர் தாழ்ச்சி மிக்க கன்னி மாமரியைத் தம் தாயாராகத் தேர்ந்துகொண்டார். ஆனால், அவர் தம் திருத்தாயாரின் அதிமிகு மகிமைக்காகவும், பேறு பலனுக்காகவும், முன்கூட்டியே அவர்களது சம்மதத்தைப் பெறாமல், அவர்களது மகனாக ஆக விரும்பவில்லை. ஆகவே, இந்தத் தாழ்ச்சியுள்ள கன்னிகை தனது சிறிய இல்லத்தில், பெருமூச்சுகளோடு, முன் எப்போதையும் விட அதிக உருக்கத்தோடும், பக்தியார்வத்தோடும், இரட்சகரை அனுப்பும்படி கடவுளை வேண்டிக்கொண்டிருந்தபோது, இதோ, மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியைச் சுமந்தபடி, அதிதூதரான கபிரியேல் வந்து சேர்கிறார்.

"பிரியதத்தத்தினால் பூரணமானவளே, வாழ்க; கர்த்தர் உம்முடனே" என்று அவர் மாமரியை வாழ்த்துகிறார் (லூக். 1:28). **தேவ வரப்பிரசாதத்தால் பூரணமாக நிறைந்திருக்கிற திவ்ய கன்னிகையே வாழ்க! சகல அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் மேலாக எப்போதும் வரப்பிரசாதத்தால் நிரம்பியிருக்கிறீர். நீர் மிகுந்த தாழ்ச்சியுள்ளவராக இருப்பதால், ஆண்டவர் உம்மோடு இருக்கிறார். நீரே பெண்களுக்குள் ஆசீர் வதிக்கப்பட்டவள், ஏனெனில், பெண்கள் அனைவரும் பாவத்தின் கீழ் வீழ்ச்சியுற்றவர்களாக இருக்க, நீரோ ஆசீர்வதிக்கப்பட்டவருக்குத் தாயார் என்ற முறையில், இப்போதும், இனி என்றென்றும் ஆசீர்வதிக்கப்பட்டவ ராகவும், எல்லாப் பாவக் கறைகளிலிருந்தும் காப்பாற்றப்பட்டவராகவும் இருக்கிறீர்.**

புகழ்ச்சிகளால் நிரம்பியிருந்த இத்தகைய வாழ்த்துதலுக்குத் தாழ்ச்சி மிகுந்த மாமரி என்ன பதிலளிக்கிறார்கள்? எதுவுமில்லை. அவர்கள் மௌனமாகவே இருக்கிறார்கள், ஆயினும் "இதை அவள் கேட்ட மாத்திரத்தில், அவருடைய வார்த்தையினால் கலங்கி, இந்த மங்களம் (வாழ்த்து) எத்தன்மையானதோ என்று யோசனையாயிருந்தாள்" (லூக்.1:29). மனித வடிவத்தில் தோன்றிய தேவதூதரின் காட்சி மாமரியைக் கலங்கச் செய்ததா? இல்லை! வேத வாக்கியம் தெளிவாயிருக் கிறது: அவரது தோற்றமல்ல, மாறாக அவரது வார்த்தைகளே அவர்களைக் கலங்கச் செய்தன.

ஆகவே, மாதாவின் கலக்கத்திற்கு அவர்களது தாழ்ச்சியே காரணமாக இருந்தது. அவர்கள் கொண்டிருந்த மிகத் தாழ்மையான சுய மதிப்பிற்கு மிகவும் அப்பாற்பட்டதாக இருந்த புகழ்ச்சி யைக் கேட்டுத்தான் அவர்கள் கலங்கினார்கள். கடவுள் எந்த அளவுக்கு அவர்களை உயர்த்தி னாரோ, அந்த அளவுக்கு மாமரி தன்னைத் தாழ்த்தி, தன் ஒன்றுமில்லாமையைப் பற்றிச் சிந்தித் தார்கள். "ஒருவேளை தேவதூதர் மாமரியைப் பார்த்து, உலகில் நீங்களே பெரிய பாவி என்று கூறியிருந்தால் கூட, அவர்களது ஆச்சரியம் இவ்வளவு அதிகமாக இருந்திருக்காது; உன்னதமான துதி புகழ்ச்சிகளின் சத்தம் அவர்களை அச்சத்தால் நிரப்பியது" என்கிறார் அர்ச். பெர்னார்தீன்.

மெசையாவின் வருகைக்கென தீர்க்கதரிசிகள் முன்னுரைத்த காலம் வந்துவிட்டதை திவ்ய கன்னிகை வேதாகமங்களிலிருந்து அறிந்திருந்தார்கள். தானியேலின் 72 வாரங்கள் முடிந்து விட்டன. யாக்கோபு உரைத்தபடி, யூதாவின் செங்கோல் அந்நிய அரசனான ஏரோதின் கைக்குச் சென்று விட்டது. மேலும், மெசையாவின் தாயார் ஒரு கன்னிகையாக இருப்பார்கள் என்பதையும் மாமரி தீர்க்கதரிசனத்தின் மூலம் அறிந்திருந்தார்கள். இந்நிலையில்தான் மெசையாவின் தாய்க்கு மட்டுமே

பொருந்தக்கூடிய இந்தப் புகழ்ச்சிகள் அவர்களில் பெரும் அச்சத்தைத்தான் ஏற்படுத்தின.

அர்ச். கபிரியேல் அதிதூதர் உடனே அவர்களை நோக்கி: "மரியாயே, நீர் அஞ்ச வேண்டாம், ஏனெனில் சர்வேசுரனிடத்தில் கிருபை பெற்றிருக்கிறீர்" (லூக். 1:30) என்றார். மரியாயே, அஞ்சாதீர்; நீர் உமது திருவிழிகளில் மிகச் சிறியவராகவும், தாழ்மையானவராகவும் இருந்தாலும், தாழ்ச்சியுள்ளவர்களை உயர்த்துபவர் மனுக்குலத்தால் இழக்கப்பட்ட வரப்பிரசாதத்தைப் பெற்றுக் கொள்ளத் தகுதியுள்ளவராக உம்மை ஆக்கியிருக்கிறார். ஆதாமின் மக்களின் பொதுவான பாவக் கறையிலிருந்து அவர் உம்மைப் பாதுகாத்திருக்கிறார். ஆகவே, இறுதியாக, தம் தாயாக இருக்கும் படி அவர் உங்களை இப்போது உயர்த்துகிறார்: "இதோ, உமது உதரத்தில் கெற்பந்தரித்து, ஓர் குமாரனைப் பெறுவீர்; அவருக்கு சேசு என்னும் நாமஞ் சூட்டுவீர்" (லூக். 1:31).

இப்போது ஏன் இந்தத் தாமதம்? "என் ஆண்டவளே, சம்மனசானவர் உங்கள் பதிலுக்குக் காத்திருக்கிறார். எங்கள் இரட்சணியத்தின் விலை உங்களிடம் தரப்பட்டிருக்கிறது; நீங்கள் சம்மதித்தால், நாங்கள் அதே கணத்தில் விடுவிக்கப்படுவோம். ஏனெனில் ஆண்டவரே உங்கள் சம்மதத்தை விரும்புகிறார், அதன் மூலம்தான் உலகத்தை இரட்சிக்க அவர் தீர்மானித்திருக்கிறார்" என்கிறார் அர்ச். பெர்னார்ட்: "சீக்கிரம் பதில் சொல்லுங்கள், ஆண்டவளே! இனியும் உலகத்தின் இரட்சணியத்தைத் தாமதப்படுத்தாதீர்கள், ஏனெனில் அது இப்போது உங்கள் சம்மதத்தைத்தான் சார்ந்திருக்கிறது" என்கிறார் அர்ச். அகுஸ்தீனார்.

மாமரி தேவதூதருக்கு இவ்வாறு பதிலளிக்கிறார்கள்: "இதோ, ஆண்டவருடைய அடிமை யானவள்; உம் வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது" (லூக்.1:38). ஓ, பரலோகத்தை மகிழ் வித்ததும், பூவுலகிற்குள் வரப்பிரசாதங்கள் மற்றும் ஆசீர்வாதங்களின் ஒரு பெருங்கடலைக் கொண்டு வந்ததுமான வல்லமையுள்ள பதிலே! இந்த வார்த்தைகள் மாமரியின் திரு உதடுகளில் முடிந்தும் முடியாதிருக்கையிலேயே, இதோ சர்வேசுரனுடைய ஒரே பேறான திருச்சுதன், தம்முடைய நித்திய பிதாவின் நெஞ்சத்தினின்று இழுக்கப்பட்டு, மகா பரிசுத்த கன்னிகையின் திருவுதரத்தில் மனிதனாகும்படி இறங்கி வருகிறார்! இந்த அதிசய வார்த்தைகள் உச்சரிக்கப்பட்ட அதே கணத்தில், இதோ, "வார்த்தையானவர் மாம்சமானார்!" கடவுளின் திருச்சுதன் இதே கணத்தில் மாமரியின் திருமகனுமானார். அகமகிழ்ந்து களிகூர்வோமாக! வெகுவாய் ஆசிக்கப் பட்டிருந்த இந்நாளில் திவ்ய கன்னிகை இரட்சணியத்தைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள்! பசாசு தோற்று ஓடுகிறது! இனி பரலோகம் நம்முடையது! வாழ்க, வாழ்க, வாழ்க, மரியாயே!

"ஓ வல்லமையுள்ள ஃபியாத் என்ற வார்த்தையே (Fiat - ஆகக்கடவது)! ஓ நற்பயன்கள் நிறைந்த ஃபியாத் என்ற வார்த்தையே! ஓ வணங்கப்படத் தகுதியுள்ள ஃபியாத் என்ற வார்த்தையே! ஏனெனில் ஒரு ஃபியாத்தைக் கொண்டு சர்வேசுரன் ஒளியையும், பரலோகத்தையும், பூலோகத் தையும் படைத்தார்; ஆனால் மாமரியின் ஃபியாத்தைக் கொண்டு அவர் நம்மைப் போன்ற மனிதன் ஆனார்!" என்று அதிசயிக்கிறார் அர்ச். வில்லனோவா தோமையார். இந்தப் பதிலில் ஆசீர்வதிக்கப்பட்ட திவ்ய கன்னிகையின் மாபெரும் தாழ்ச்சியை தியானித்துப் போற்றுங்கள்! கடவுளுக்கே தாயார் என்னும் உன்னத மகத்துவத்தின் மேன்மை பற்றிய முழுமையான ஞான வெளிச்சம் அவர்களுக்குத் தரப்பட்டது. அவர்களே ஆண்டவரால் தேர்ந்துகொள்ளப்பட்ட பாக்கியவதியான தேவ தாயார் என்பது கபிரியேல் அதிதூதரால் இதோ உறுதிப்படுத்தப்பட்டு விட்டது!

இதெல்லாம் சேர்ந்தும்கூட, மாமரி தன்னைப் பற்றிக் கொண்டிருந்த மதிப்பீடு அணுவளவும் அதிகரிக்கவில்லை! தான் உயர்த்தப்பட்டதில் அக்களிக்கும்போதும்கூட, கடவுளின் மகத்துவத்

தின் பார்வையில் சுயத்தை அழித்துக்கொள்ளும் ஒரு அடிமையாக மட்டுமே அவர்கள் தன்னைக் காண்கிறார்கள். அர்ச். பெர்னார்ட் இதைக் குறித்து: "**தன்னுடைய மாசற்ற கன்னிமையால் அவர்கள் கடவுளைப் பிரியப்படுத்தினாலும், தன்னுடைய தாழ்ச்சியால்தான் அவர்கள் அவரைக் கருத்தாங்கினார்கள்**" *என்கிறார்.*

அர்ச். எரோணிமுஸ் இதை இப்படிக் கூறுகிறார்: "மாமரியின் மற்ற எல்லா பக்திக்குரிய புண்ணியங்களையும் விட அதிகமாக, அவர்களுடைய தாழ்ச்சியின் காரணமாகவே அவர் அவர்களைத் தம்முடைய திருத்தாயாராகத் தேர்ந்துகொண்டார்." அர்ச். அகுஸ்தீனார் இதைச் சுருக்கிக் கூறும் விதமாக: "**மாமரியின் தாழ்ச்சி ஓர் ஏணியானது; அதன் வழியாக நம் ஆண்டவர் பரலோகத்திலிருந்து பூலோகத்திற்கு இறங்கி வரத் தயைபுரிந்தார்**" *என்கிறார்.!*

இவ்வாறு நம் மீட்புச் செயலைத் தொடங்கி வைத்த மாதாவுக்கும், அவர்கள் வழியாக கடவுளுக்கும் நாம் நன்றி செலுத்துவோமாக. நமக்கு உதவி செய்ய மாமரியிடம் வல்லமை குறைவுபடவில்லை. உதவுவதற்கு அவர்களிடம் சித்தமும் குறைவுபடவில்லை. நாம் உண்மை யாகவே அவர்களைப் பிரியப்படுத்த விரும்பினால், மாதாவின் உண்மையான பிள்ளைகளாக வாழ முயல்வோம், அடிக்கடி "மரியாயே வாழ்க!" என்று சொல்லி அவர்களை வாழ்த்துவோம். மாமரி ஒருமுறை அர்ச். மெட்டில்டாவுக்குத் தோன்றி, இந்த வாழ்த்தைத் தவிர வேறு எதனாலும் தான் அதிகமாக மகிமைப்படுத்தப்படுவதில்லை என்று உறுதியளித்தார்கள். இந்த வழியைப் பயன்படுத்தி, நாம் இந்த இரக்கத்தின் மாதாவிடமிருந்து இன்னும் விசேஷமான வரப்பிரசாதங் களைப் பெற்றுக்கொள்வோம்.

மரியாயே வாழ்க!

சந்நியாச ஒழுக்கம்

(கிறீஸ்துநாதர் அநுசாரம் - 17 -ஆம் அதிகாரம் - பக்கம் 47)

ஒரு மடத்தில், ஒரு சந்நியாச சபையில் வசித்துத் தன் பேரில் யாதொரு குறையும் சொல்லப்படாவண்ணம் அதில் ஜீவித்து, மரணம் வரையில் பிரமாணிக்கமாய் அதில் நிலைத்திருப்பது அற்பக் காரியமல்ல. அவ்விடத்தில் புனிதனாய் ஜீவித்து நல்ல முடிவு அடைகிறவன் பாக்கியவான். நீ அதில் தகுதியானபடி நிலைத்து வளர்ச்சியடைய வேண்டுமானால், உலகின் பரதேசியைப் போலவும், வழிப் போக்கனைப் போலவும் உன்னை எண்ணக்கடவாய். சந்நியாசியாக ஜீவிக்க உனக்கு ஆசையிருக்கும் பட்சத்தில், சர்வேசுரனை வேண்டி நீ பைத்தியனாக வேண்டும்!

சந்நியாச உடை தரித்தல் அல்ல, ஆனால் நடத்தையின் சீர்திருத்தமும், ஆசாபாசங்களின் முழு ஒறுத்தலுமே ஒருவனை மெய்யான சந்நியாசியாக்குகின்றன. சர்வேசுரனையும், தன் ஆத்தும இரட்சணியத் தையும் தேடுகிறவன் இடையூறும், துன்பமுமே அடைவான். அன்றியும் எல்லோரிடத்திலும் தாழ்ந்தவனாகவும், எல்லோருக்கும் கீழ்ப்படிதலுள்ளவனாகவும் இருக்கப் பிரயாசைப்படாதவன் சமாதானத்தில் வெகு காலம் நிலைத்திருக்க மாட்டான்.

நல்ல சந்நியாசி யார்? எப்போதும் உத்தமதனத்தை நாடுகிற கிறீஸ்தவன். எனவே, சந்நியாச வாழ்க்கை என்பது என்னவென்றால், அதிக உத்தம கிறீஸ்தவனாய் வாழ்ந்து வருவதே. தன்னைத் தானே மறுதலிப்பது – இதில்தான் உத்தம கிறீஸ்தவ வாழ்க்கை அடங்கியிருக்கிறது. அந்தக் கடமை நமக்கு உரியதுதான்; ஏனெனில், "உங்கள் பரலோகப் பிதா உத்தமராயிருப்பது போல நீங்களும் உத்தமராயிருங்கள்" என்று சிலருக்கு மாத்திரமல்ல, எல்லோருக்குமே சேசுநாதர் சொல்லியிருக்கிறார். இக்கட்டளையை நிறைவேற்றுவதற்காக நம்மைத்தானே மறுதலிப்போம்; நமது ஆண்டவருடைய பலியோடு ஒன்றித்திருப்போம்; உலக நிந்தை அவமானங்களை நேசிப்போம்; ஆங்காரத்தை ஒழித்து விட்டால் இரட்ணியம் அடைந்தது போலாகும்.

மரியாயே வாழ்க!

தேவ பராமரிப்பு

(*My Catholic Faith* என்ற நூலிலிருந்து மொழிபெயர்த்துத் தொகுக்கப்பட்டது.)

கடவுள் நம்மைக் காண்கிறார், நேச அக்கறை யோடு அவர் நம்மைக் கண்காணிக்கிறார்.

1. சர்வேசுரன் உலகத்தைப் பராமரித்து, ஆண்டு நடத்துகிறார். அவர் தமது தாங்கும் வல்லமையை ஒரு கணம் விலக்கிக்கொள்வார் என்றால், சிருஷ்டிப்பு முழுவதும் ஒன்றுமில்லாமைக்குள் விழுந்து காணாமல் போகும். அவர் தம்முடைய திருக்கரத்தில் நம்மை வைத்துத் தாங்குவதாகத் தோன்றுகிறது. அவர் ஒரு கணம் நம்மை விட்டுவிட்டால், மின்னோட்டம் நின்றவுடன் அணைந்து போகும் மின்விளக்கைப் போல நாம் வெறுமையாகி விடுவோம். .

2. சர்வேசுரனுடைய திருச்சித்தமோ, அனுமதியோ இல்லாமல் எதுவும் நிகழ்வதில்லை. நம்முடைய பரலோகப் பிதாவின் சித்தமின்றி ஒரு குருவியும் கூட தரையில் விழாது என்றும், நம் தலையின் உரோமங்கள் கூட எண்ணப்பட்டிருக்கின்றன என்றும் நம் ஆண்டவர் கூறுகிறார்.

இரயிலுக்கு எஞ்சினைப் போலவும், கப்பலுக்கு அதன் தலைவனைப் போலவும், கடவுள் உலகத்தையும், மனிதர்களையும், பராமரித்து நடத்துகிறார். அவரே பிரபஞ்சம் முழுவதையும், எல்லாப் படைப்புகளையும் வழிநடத்துகிறார். அவரே மக்களினங்களை வழிநடத்துகிறார்.

நம்மீது கடவுளுக்குள்ள இந்த நேச அக்கறை **தேவ பராமரிப்பு** என்றும், சிருஷ்டிகளை அவற்றின் இறுதிக் கதியை நோக்கி வழிநடத்துவதற்கான தேவ திட்டமென்றும் அழைக்கப்படுகிறது.

1. தேவ பராமரிப்பு நல்லது, நிலையானது, நீதியானது. அது பூமியிலுள்ள தாழ்ந்தவையும், மிகவும் புறக்கணிக்கப்பட்டவையுமான சிருஷ்டிகளைக் கூட விழிப்போடு பராமரிக்கிறது.

சர்வேசுரனுடைய கனிவுமிக்க நேசத்தைப் பற்றிப் பரிசுத்த வேதாகமம் இப்படிக் கூறுகிறது: "பெண்ணானவள் தன் பாலனை மறப்பதுண்டோ? தன் கற்பகர குழந்தைக்கு (அவள்) இரங்கா திருப்பாளோ? அப்படி அவள் மறந்தாலும் நாம் உன்னை ஒருபோதும் மறக்க அறியோம். இதோ நமது கரங்களில் உன்னை அட்சரமிட்டிருக்கிறோம்; உன் பட்டணத்து மதில்கள் நம் கண்கள் முன் எப்போதும் பிரசன்னமாகும்" (இசை. 49:15-16). "அவர் உங்களை விசாரிக்கிறவராகை யால், அவர்மேல் உங்கள் சகல கவலைகளையும் வைத்துவிடுங்கள்" (1 இரா. 5:7).

ஏழைகளும், உலகத்தால் புறக்கணிக்கப்பட்டவர்களும், மறக்கப்பட்டவர்களுமாகிய மனிதர்கள் மீது சர்வேசுரன் விசேஷ அக்கறை கொண்டிருக்கிறார். அவர் தாழ்ச்சியுள்ளவர்களின் வழியாக அடிக்கடி தம் மகிமையை வெளிப்படுத்தியிருக்கிறார். இவ்வாறு ஏழைகளான இடையர் கள்தான் திவ்ய இரட்சகரின் பிறப்பு பற்றிய செய்தியை முதலாவதாகப் பெற்றுக்கொண்டார்கள். ஏழைகளான மீனவர்கள்தான் அவரது அப்போஸ்தலர்களாக இருந்தார்கள். உலகிற்கு ஓர் ஏழை இளம்பெண்ணாகத் தோன்றிய திவ்ய கன்னிகைதான் அவருடைய தாயாராக இருந்தார்கள்.

தேவ பராமரிப்பு இவ்வளவு நல்லதாக இருந்தால், பிறகு ஏன் இவ்வுலகில் தரித்திரமும், நோயும், துன்பங்களும், மற்ற சரீரப்படியான தீமைகளும் இருக்கின்றன? சரீரப்படியான தீமைகள் பெரும்பாலும்

சரீரத்திலும், மனதிலும் சிருஷ்டிகளுக்குள்ள பலவீனத்தின் விளைவாக இருக்கின்றன. கடவுளின் ஏற்பாடுகளை நாம் அடிக்கடி புரிந்துகொள்வதில்லை என்றாலும், நாம் விசுவாசம் உள்ளவர்களாக அப்போஸ்தலரோடு சேர்ந்து: "அவரது நியாயத் தீர்ப்புகள் எவ்வளவோ புத்திக்கு எட்டாதவைகளுமாய், அவருடைய வழிகள் எவ்வளவோ ஆராய்ந்தறியக்கூடாதவைகளுமாயிருக்கின்றன" (உரோ. 11:33) என்று கூற வேண்டும்.

1. சரீரப்படியான தீமை என்பதன் ஒரு பகுதி நம் கர்மப் பாவங்களுக்குரிய தண்டனையாக இருக்கிறது. அது நல்லவர்களை அர்ச்சிக்கப் பயன்படுகிறது, நித்திய இரட்சணியத்தை அடைய அவர்களுக்கு உதவுகிறது. மிகப் பெரிய அர்ச்சியசிஷ்டவர்கள்தான் உலகில் மிக அதிகம் துன்பப்பட்டிருக்கிறார்கள். நீதிமான் தன் தேவ, பிறர்சிநேகத்தை நிரூபிக்க உதவியாகக் கடவுள் அவனுக்குத் துன்பத்தை அனுப்புகிறார்.

இவ்வாறு, பரிசுத்தரான யோபு தமக்குச் சொந்தமாயிருந்த எல்லாவற்றையும் இழந்தார். என்றாலும் கடவுளை அவர் அதிகமாக நேசித்தார். தோபியாஸ் குருடரும் ஏழையுமானார், ஆனால் அவருடைய அந்தப் பரிதாப நிலை கடவுளின் மீதான அவருடைய நேசத்தை நிரூபிக்க உதவியது. ஒலிவத் தோப்பில் நம் ஆண்டவரை நாம் கண்டுபாவிப்போமாக. அங்கே, "பிதாவே, என் சித்தமல்ல, உமது சித்தமே நிறைவேறக் கடவது!" என்பதே அவருடைய ஜெபமாக இருந்தது.

2. நோயிலும், மரணத்திலும், தரித்திரத்திலும், கலாபனைகளிலும், மற்ற நிர்ப்பாக்கியங்களிலும் கடவுளின் திருச்சித்தத்திற்கு மகிழ்ச்சியோடு தன்னைக் கையளிப்பவன் உண்மையான இருதய சமாதானத்தைப் பெற்றுக்கொள்கிறான். அவன் இவ்வுலகிலும் ஆசீர்வதிக்கப்படுவான்.

3. கடவுள் அடிக்கடி உடல் ரீதியான தீமையைப் பாவிகளுக்கு அனுப்பி அவர்களைச் சரியான பாதைக்குத் திருப்புகிறார். அது அவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாக உதவுகிறது. சரீர நோயின் வழியாக மனந்திருப்பப்பட்டவர்களில் முக்கியமானவர்களாக, நாம் அர்ச். பிரான்சிஸ் அசிசியாரையும், அர்ச். லொயோலா இஞ்ஞாசியாரையும் குறிப்பிடலாம்.

4. துன்பங்கள் ஒரு வரப்பிரசாதமாக இருக்கக் கூடும். அவை வரவேற்கப்பட வேண்டும். பொறுமையோடு ஏற்றுக்கொள்ளப்படும் துன்பங்களின் வழியாக, பாவத்திற்குரிய அநித்தியத் தண்டனை குறைக்கப்படுகிறது, அல்லது முழுமையாக நீக்கப்படுகிறது. நாம் இவ்வுலகில் எவ்வளவு அதிகமாகத் துன்பப்படுகிறோமோ, அவ்வளவுக்கு மறு ஜீவியத்தில், உத்தரிக்கிற ஸ்தலத்தில் நம் கடனைக் குறைவாகத் திருப்பிச் செலுத்த வேண்டியவர்களாக இருப்போம்.

தேவ பராமரிப்பு நீதியுள்ளது என்றால், ஏன் நல்லவர்கள் பெரும்பாலும் மிகுந்த துன்பங்களுக்கு உள்ளாகும் அதே சமயம், தீயவர்கள் செல்வச் செழிப்பிலும், உலக மகிமையிலும் வாழ்கிறார்கள்?

உலகத்தின் நிர்ப்பாக்கியங்களும், திருப்திகளும் நிஜமானவையோ, நீடித்தவையோ அல்ல, அவை கடவுளின் நீதியை அளவிட முடியாது.

1. எந்தப் பாவியும் உண்மையான சந்தோஷத்தைக் கொண்டிருப்பதில்லை. அவனது மனசாட்சி அவனுக்கு உள்ளரங்க சமாதானத்தைத் தராது. செல்வங்களும், உலக மதிப்பும், இன்பங்களும் ஆத்தும சமாதானத்தை ஒருபோதும் தர முடியாது. அதற்கு மாறாக, கடவுளை நேசிக்கும் யாருக்கும் உண்மையான நிர்ப்பாக்கியம் என்பது கிடையாது. ஏனெனில் அவன் உள்ளரங்க சமாதானத்தையும், நல்ல மனச்சான்றையும் கொண்டிருக்கிறான். உண்மையான சம்பாவனையும், தண்டனையும் மரணத்திற்குப் பிறகுதான் தொடங்குகின்றன.

பூலோகத்தில் பாவிகள் தாங்கள் செய்யும் நன்மை எதுவாயினும், அதற்குரிய சம்பாவனையைப் பெற்றுக்கொள்கிறார்கள். அவர்களுடைய நற்பேறு இவ்வுலக வாழ்வில் மட்டுமே நீடிக்கிறது. நீதிமான்களோ தாங்கள் இவ்வாழ்வில் செய்யக்கூடிய எந்தப் பாவத்திற்காகவும் இவ்வுலகிலேயே தண்டிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய சம்பாவனை மறு வாழ்வில் முழுமையாயிருக்கிறது.

3. ஆகவே, நாம் தேவ சித்தத்திற்கு நம்மைக் கையளித்துவிட வேண்டும். இவ்வாறு நாம் துன்ப சோதனைகளுக்கு மத்தியிலும் மனச் சமாதானத்தைக் கொண்டிருப்போம். இது நம் உண்மையான வீடு அல்ல என்றும், நாம் பரலோகப் பிரஜைகள் என்றும் துன்பங்கள் நமக்கு நினைவுபடுத்துகின்றன.

சர்வேசுரன் பாவத்திற்குப் பொறுப்பானவரா?

சர்வேசுரன் பாவத்திற்குப் பொறுப்பானவர் அல்லர்; பாவம் மனிதன் தன்னுடைய சுயாதீன சித்தத்தைத் தவறாகப் பயன்படுத்துவதன் விளைவு ஆகும்.

1. கடவுள் பாவத்தைச் சித்தங்கொள்வதோ, அதற்குக் காரணமாக இருப்பதோ இல்லை. அவர் அதைத் தடை செய்கிறார், பாவியைத் தண்டிக்கிறார். அவர் நல்லவர்களைத் துன்பங்களால் பரிசோதித்து, அதிகப் பிரமாணிக்கமுள்ள கீழ்ப்படிதலுக்கான வாய்ப்புகளை அவர்களுக்குத் தருவது என்பது போன்ற தம்முடைய சொந்தக் காரணங்களுக்காகப் பாவத்தை அனுமதிக்கிறார்.

கடவுள் மனிதனை நன்மை, தீமையைத் தேர்ந்துகொள்ளும் சுதந்திரமுள்ளவனாகப் படைத்தார். நாம் பரலோகத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி நன்மையைத் தேர்ந்துகொள்ள வேண்டுமென்று அவர் விரும்புகிறார். ஆனால் நாம் சுதந்திரமுள்ளவர்களாதலால், நாம் விரும்பினால், தீமையைத் தேர்ந்துகொள்ள முடியும். நம் பாவங்களுக்குக் கடவுள் பொறுப்பானவர் அல்லர்.

2. கடவுள் அனுமதிக்கிற தீமை நிகழ்வதாக இருந்தாலும், அவர் அதை நமக்கு நன்மையாக மாற்றுகிறார். அவர் தீமையிலிருந்து நன்மையைப் பிறப்பிக்கிறார். இவ்வாறு பிதாப்பிதாவாகிய பழைய ஏற்பாட்டு சூசை தம் சகோதரர்களை நோக்கி: "நீங்கள் என்னைக் கெடுக்கச் சதி யோசனை பண்ணினீர்களே; ஆனால் தேவன் தின்மையை நன்மையாக மாற்றினார்" (ஆதி. 50:20) என்றார். "ஏனெனில், சர்வேசுரனை நேசிக்கிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கேதுவாக உதவுகிறது" (உரோ. 8:28).

"ஒருவன் நம்முடைய ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரைச் சிநேகியாதிருப்பானாகில், சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவான்"

(1 கொரி.16:22)

நம்முடைய ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரை மெய்யாகவே நேசித்துக்கொண்டிருங்கள். அவரை மெய்யாகவே நேசிப்பது என்பதற்கு, அவருடைய கற்பனைகளைக் கடைப் பிடித்தல் என்பது பொருள். ஏனெனில், "என் கற்பனைகளைக் கைக்கொண்டு அவைகளை அநுசரிக்கிறவன் எவனோ, அவனே என்னைச் சிநேகிக்கிறவன்" என்று நம் ஆண்டவர்தாமே அறிவித்திருக்கிறார் (அரு.14:21). அவரை மெய்யாகவே நேசிக்கிறவன் அவருடைய சுவிசேஷத்தில் அடங்கியுள்ள எல்லாச் சத்தியங்களையும் விசுவசித்து அவற்றை நேசிப்பான். அவரை மெய்யாகவே நேசிக்கிறவன் அவருடைய ஞான சரீரத்தின் உறுப்புகளாகிய தரித்திரர்களையும் நேசித்து அவர்களுக்கு இரங்குவான். அவரை மெய்யாகவே நேசிக்கிறவன் அவருடைய ஞான சரீரமாகிய திருச்சபையை நேசித்து, அதற்குக் கீழ்ப்படிவான் என்று அர்ச். சின்னப்பரின் கருத்தாயிருக்கிறது.

சேசுநாதரின் உயிர்ப்பு: விசுவாசத்தின் பரம இரகசியம்

“கிறீஸ்துநாதர் உயிர்த்தெழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கிறது” (1 கொரி. 15:17). நமதாண்டவரின் உயிர்ப்புதான் இரட்சணியத்தின் அடிப்படைப் பரம இரகசியமாக இருக்கிறது. சேசுவின் உயிர்ப்பின் வெற்றி, உலகம் இரட்சிக்கப்பட்டு, கால முடிவு வரை, அதன் இரட்சணிய வரலாறு தொடங்கி நடைபெறுகிறது என்ற சத்தியத்தின் மீது இடப்பட்ட தெய்வீக முத்திரையாக இருக்கிறது. மனிதாவதாரத்தில் தொடங்கிய இரட்சணியப் பணி, சிலுவைப் பலியில் தன் உச்சத்தை அடைந்தது. ஆனால் அவரது மகிமையுள்ள உயிர்ப்பில்தான் அது முழுமையடைந்தது.

சேசுவின் உயிர்ப்பு மனிதனாய் அவதரித்த சர்வேசுரனுடைய வரலாறுபூர்வமான இரட்சணியப் பணியின் நிறைவேற்றமாக இருப்பதால், அது விசுவாசத்தின் பரம இரகசியமாக இருக்கிறது. கிறீஸ்துநாதர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தவர்களில் ஒருவர் என்று சொல்லப்படக்கூடாது. மற்ற அனைவரும் கிறீஸ்துநாதர் வழியாகச் செயலாற்றிய நித்திய பிதாவின் வல்லமையால் உயிர்ப்பிக்கப்பட்டார்கள்; ஆனால் தமது தெய்வீகத்தில் பிதாவோடு ஒரே பொருளானவர் தம் சொந்த வல்லமையைக் கொண்டு உயிர்த்தெழுந்தார்.

கிறீஸ்துநாதரின் உயிர்ப்பு பாவத்தின் மரணமாகும். “கிறீஸ்துநாதர் உயிர்த்தெழுந்திராவிட்டால், நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் கிடக்கிறீர்கள்” என்கிறார் அர்ச். சின்னப்பர் (1கொரி. 15:17). எனவே, ஒவ்வொரு கிறீஸ்தவனும் பாவத்திற்கு மரித்து, அதன் மூலம் கிறீஸ்துநாதரின் மரணத்துடன் இணைக்கப்பட்டு, அவரோடு உயிர்த்தெழ வேண்டியவனாக இருக்கிறான். பாவத்தில் நிலைத்திருப்பவனோ, கிறீஸ்துநாதரின் மீட்பின் திரு இரத்தப் பேறுபலன்களிலும், அவரது உயிர்ப்பிலும் இன்னும் பங்குபெறாதவனாக இருக்கிறான்; அவனிடம் இரட்சணியத்தின் நம்பிக்கையில்லை.

கிறீஸ்துநாதரின் உயிர்ப்பு அவரது மத்தியஸ்தத்தின் அதிகாரபூர்வமான தொடக்கம்

சேசுவின் உயிர்ப்பு கடவுளுக்கும் மனிதருக்குமிடையே மத்தியஸ்தராக ஏற்படுத்தப்பட்டிருக்கிற தேவ-மனிதரின் பரம இரகசியமாகவும் இருக்கிறது. அவரே வரப்பிரசாத ஒழுங்கில் கடவுளோடு நம்மை ஒன்றிணைக்கிறார். கடவுள் அவர் வழியாகவே தம்மை நமக்குத் தருகிறார். நாமும் நம் ஆண்டவராகிய கிறீஸ்துநாதரின் வழியாகவே கடவுளிடம் திரும்புகிறோம். சேசுநாதர் மட்டுமே பிதா, இஸ்பிரீத்துசாந்து ஆகியோரின் உத்தம வெளிப்பாடாகவும், சர்வேசுரன் மனிதனைத் தேடி வந்த வழியாகவும், மனிதன் கடவுளை அடைவதற்கான வழியாகவும் இருக்கிறார். “நாம் இரட்சிப்படைய அவருடைய நாமத்தையன்றி வேறு நாமம் எதுவும் நமக்குத் தரப்படவில்லை.”

அவர் உயிர்த்தெழாமல் இருந்திருந்தால், பிதாவின் வலது பாரிசத்தில் அமரவும், தம் திருக்காயங்களை அவருக்குக் காட்டி நமக்காகப் பரிந்து பேசவும் இயலாதவராய் இருந்திருப்பார். அவருடைய மத்தியஸ்தம் தம்முடைய பரிசுத்த மாதாவின் திருவுதரத்தில் அவர் உற்பவமான கணத்திலேயே தொடங்கி விட்டது என்றாலும், தேவ திட்டத்தின் பரிபூரண முழுமையில், அது அவருடைய உயிர்ப்பில்தான் நிறைவு பெற்றது.

கிறீஸ்துநாதரிடமிருந்து மனிதனுக்குக் கடந்து வரும் தேவ–மனித ஒன்றிப்பின் நிறைவேற்றம்!

நம்மை இரட்சிக்கும்படி கிறீஸ்து தம் தெய்வீகத்தோடு நம் மனித சுபாவத்தைச் சேர்த்துக் கொண்டார். தம்முடைய உயிர்ப்பின் வல்லமையைக் கொண்டு அவர் நம் மனித சுபாவத்தைத் தமது தேவ சுபாவத்தோடு ஒன்றிக்கிறார். மனிதன் பாவத்தை எதிர்த்துச் செய்யும் போராட்டமும், அதில் அவன் தேவ உதவியோடு அடையும் வெற்றியும், கிறீஸ்துநாதரின் தெய்வீகத்தில் அவனைப் பங்கடையச் செய்கிறது; பிதாவின் வாரிசுரிமையுள்ள மகனாக அவனை ஆக்குகிறது; பரலோகத்திற்குச் சுதந்திரவாளியாக அவனை மாற்றுகிறது.

ஆகவே, அன்பர்களே, கிறீஸ்துவின் உயிர்ப்பு அவரது சகல மீட்புச் செயல்களையும், கல்வாரிப் பலியையும் முழுமைப்படுத்துகிறது. உயிர்ப்பு இல்லாவிடில், அவர் பாவத்தின்மீதும், சாவின் மீதும் வெற்றிபெற்றவராகக் கருதப்பட முடியாது. உயிர்ப்பு இன்றி, நம் விசுவாசம் வீணாயிருந் திருக்கும், கிறீஸ்துவின் மீட்புச் செயல்கள் அனைத்தும் பலனற்றுப் போயிருக்கும். ஆனால் நம் ஆண்டவர் உயிர்த்தெழுந்தார்; நாமும் இரட்சணிய நம்பிக்கையை அடைந்திருக்கிறோம். "நம் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரைக் கொண்டு நமக்கு ஜெயம் தந்தருளின சர்வேசுரனுக்குத் தோத்திரம்" (1 கொரி. 15:57).

சேசுவின் உத்தானத்தில் பங்குபெறுவதன் மூலம், நாம் "சர்வேசுரனுடைய சுதந்திரக்காரரும், கிறீஸ்துவுக்கு உடன் சுதந்தரக்காரராகவும் இருக்கிறோம். ஆயினும் அவரோடு மகிமையடையும் படிக்கு அவரோடு பாடுபட்டால்தான் அப்படியிருப்போம்" (உரோ. 8:17). சிலர் உழைக்க மனமின்றி, அதன் பலனை மட்டும் பெற விரும்புகிறார்கள். தீர்வையின்போது, தங்கள் செயலற்ற தனத்தின் கூலியை அவர்கள் பெற்றுக்கொள்வார்கள். நாமோ "மேலானவைகளைக் கண் முன்பாகக் கொண்டு," சந்தோஷ உற்சாகத்தோடு, நம் நித்திய மகிமையின் பந்தயத்தில் ஓடு வோம்; நமக்கு எதிரானவையாகத் தோன்றும் துன்பங்கள் உண்மையில் நம் வெற்றியின் ஆயுதங் களாக மாறும்; ஏனெனில் இவ்வுலகத் துன்பங்களாகிய அற்பமான விலையைக் கொடுத்து, "கண்கள் காணாததும், காதுகள் கேட்காததும், மனித இருதயத்திற்கு எட்டாததுமாகிய" மாபெரும் பொக்கிஷத்தை நம்மால் பெற்றுக்கொள்ள முடியும். அமைந்த மனதோடு துன்பங் களை ஏற்றுத் தாங்கிக்கொண்டு, பாவத்திற்கு மரித்து, பரிசுத்தமாக வாழும்போது சேசுவோடு நாமும் உயிர்த்தெழுந்து, அவருடைய மகிமையில் பங்குபெறுவோம்.

மரியாயே வாழ்க!

கன்னிகையாயிருத்தல் என்பதன் பொருள்

"கன்னிகையாயிருத்தல் என்றால் மனித அன்பை அறியாதிருப்பது, கடவுளின் அன்பை மட்டுமே அறிந்திருப்பது. கன்னிகையாயிருத்தல் என்றால், ஆண்டவரைப் பற்றி மட்டும் சிந்திப்பது; மனதில் குழந்தையாகவும், இருதயத்தில் சம்மனசாகவும் இருப்பது; கடவுளை நோக்குவதற்காக மட்டுமே கண்களைக் கொண்டிருப்பது; அவருக்கு மட்டுமே செவி கொடுப்பது; அவரை மட்டுமே வாயால் புகழ்வது; தன்னைப் பலிப்பொருளாகக் கடவுளுக்கு அர்ப்பணிப்பதற்காகவே கரங்களையும், அவரைத் தீவிரமாய்ப் பின்செல்லவே கால்களையும் கொண்டிருப்பதும் அவருக்கு அளிக்கப்படுவதற்காகவே இருதயத்தையும், வாழ்வையும் கொண்டிருப்பதுமாகும்" - "கன்னிகையாயிருத்தல் என்றால் என்ன?" என்று கேட்ட தனது தாய் அர்ச். அன்னம்மாளுக்கு அமல உற்பவச் சின்னக் கன்னிகை தந்த அற்புதமான பதில்!

(கடவுள்-மனிதனின் காவியம், புத்தகம் 1, அதிகாரம் 4, பக்கம் 65-லிருந்து எடுக்கப்பட்டது.)

நீதிமானான அர்ச். சூசையப்பர்

"அவளுடைய பத்தாவாகிய சூசை நீதிமானாயிருந்தார்" (மத். 1:19) என்று இஸ்பிரீத்து சாந்துவானவர் கூறுகிறார். சூசையப்பர் நீதிமானாக, நேர்மையுள்ள மனிதராக இருந்தார். தமது

பரிசுத்த மணவாளி கருத்தரித்திருப்பதை அறிந்ததும், அவர்களைக் காட்டிக் கொடுக்க மனமில்லாதிருந்ததால், அவர் நீதிமான் என்று அர்ச். மத்தேயுவால் அழைக்கப்படுகிறார். இது மிகவும் நாகரீகமான செயல். ஆனால் நீதி என்பது வெறும் நாகரீக நடத் தையை விட மிகவும் மேலான ஒரு புண்ணியமாகும். அப்படியானால் சுவிசேஷம் அவரை நீதிமான் என்று அழைப்பதன் காரணமென்ன? பதிலை அதே சுவிசேஷம் தருகிறது: "சூசையப்பர் நித்திரையினின்று எழுந்து, ஆண்டவருடைய தூதன் தமக்குக் கட்டளையிட்டபடி செய் தார்" (1:24). ஆம். சூசையப்பர் சர்வேசுரனுக்குக் கீழ்ப்படிதல் உள்ளவ ராக இருந்தார். அவர் தம் செயல்கள் யாவையும், கடவுளின் திருச் சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தி, அதன் மூலம், தமது பரிசுத்த மணவாளிக்கு அடுத்ததாக, கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்ட நீதிமானாகிறார்.

ஆகவே சூசையப்பரின் நீதி அவரது நாகரீக நடத்தைக்கு மிகவும் மேற்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். அது வெறும் நியாயமான நடத்தைக்கு மிகவும் அப்பாற்பட்டது. பண்டைய தத்துவ ஞானிகள் இதைப் புரிந்துகொள்ளவில்லை. ப்ளேட்டோ, "நீதி என்பதென்ன?" என்பது பற்றி ஒரு முழுப் புத்தகத்தையே எழுதினாலும், இறுதியில் அது என்னவென்று தமக்குத் தெரியாது என்று முடிக்கிறார்! சம்மனசுக்கொத்த வேதபாரகரான அர்ச். தாமஸ் அக்குயினாஸ் நீதியை வரையறுக்கும் விதமாக: "ஒவ்வொருவருக்கும் உரியதை நிலையானதும், நிரந்தரமானதுமான சித்தத்துடன் கொடுக்கும் நற்பழக்கமே நீதியாகும்" என்று கூறுகிறார். இது நல்ல விளக்கம்தான், ஆனால் இது இன்னும் தெளிவுபடுத்தப்பட வேண்டியதாக இருக்கிறது. நீதியைப் பற்றிய வேதாகமச் சித்தரிப்புக்கு இந்த வரையறையைப் பொருத்திக் காட்டும்படி, நாம் அதை இப்படி வரையறுக்கலாம்: "நீதிமான் என்பவன் தான் செய்ய வேண்டியதைச் செய்பவன். அவன் ஒரு தனி மனிதனாகவும், ஒரு குடும்பத்தின் தலைவனாகவும், கடவுளின் ஒரு குழந்தையாகவும், தான் செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டும்."

இப்போது, சூசையப்பர் எப்படி நீதிமானாயிருக்கிறார் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. ஒரு தனி மனிதராக, அவர் மகா பரிசுத்தராகவும், தேவ கட்டளைகளை விருப்பத் தோடு நிறைவேற்றுபவராகவும் இருந்தார். திவ்ய கன்னிகைக்கு மணவாளராக யூத குருக்களால் தீர்மானிக்கப்படுமுன்பே அவர் பரிசுத்த விரத்தத்துவத்தைத் தம் வாழ்நாள் முழுவதும் கடைப் பிடித்து வாழத் தீர்மானித்திருந்தார்.

குடும்பத் தலைவர் என்ற முறையில் அவர் நீதிமானாயிருந்தார். கடவுளின் திருச்சித்தத்தின் படியும், தம் சொந்த விருப்பம் மற்றும் தீர்மானத்தின்படியும் அவர் திவ்ய கன்னிகைக்குத் தகுதி யுள்ள கன்னி மணவாளராகவும், அவர்களுக்கும், அவர்களுடைய தெய்வீகத் திருச்சுதனுக்கும் தந்தையாகவும், பாதுகாவலராகவும் இருந்தார். குடும்பத் தலைவர் என்ற முறையில் தம் கடமை களை நிறைவேற்றுவதற்காக அவர் கடுமையாக உழைத்தார், சில தனி வெளிப்பாடுகளில் உள்ள படி, சர்வேசுரனுடைய திருச்சுதனுக்கும், அவருடைய திருத்தாயாருக்கும் உணவளிக்கும்படி பிச்சையெடுக்கும் அளவுக்கு அவர் தாழ்ச்சியும், சிநேகமும் மிகுந்தவராக இருந்தார். தமது

திருக்குடும்பத்திற்காக, பரதேச வாழ்வு போன்ற கடும் துன்பங்களையும் அன்போடு ஏற்றுக் கொண்டார்.

திவ்ய கன்னிகை சர்வேசுரனுக்குத் தாயாயிருக்கும்படி கடவுள் தன்னைத் தேர்ந்தெடுத்து, தன் அனுமதியைக் கேட்டபோது, ஒரு கணமும் தாமதிக்காமல் உடனே தன்னைத் தாழ்த்தி, தன் திருக் குமாரனின் பிதாவானவருக்குத் தன்னை அடிமையாக ஒப்புக்கொடுத்தார்கள். அவ்வாறே, அந்த மகா பாக்கியவதிக்குக் கன்னி மணவாளராகவும், அவர்களது திருக்குமாரனுக்கு வளர்ப்புத் தந்தையாக வும், பாதுகாவலராகவும் இருக்கும்படி கடவுளால் தாம் தேர்ந்துகொள்ளப்பட்டிருப்பதைத் தேவ தூதர் வழியாக அறிந்துகொண்டபோது, சூசையப்பரும் தம்மைத் தாழ்த்தி, பிதாவின் அடிமையாகிய திவ்ய கன்னிகைக்கும், அவதரித்த வார்த்தையானவருக்கும் தம்மை ஊழியராக ஒப்புக்கொடுத்தார். இந்த ஒப்புயர்வற்ற மகிமை அவரைப் பெருமைகொள்ளச் செய்யவில்லை. ஒரு விதத்தில் மனித மீட்பிற்குக் கடவுள் தம்மையும் சார்ந்திருக்கத் திருவுளங்கொண்டார் என்பது அவரைப் பெருமை கொள்ளச் செய்யவில்லை. தரித்திரமும், மனிதர்களுக் கெல்லாம் மாபெரும் மகிழச்சியூட்டும் மகா பெரிய தேவ கைங்கரியம் நிகழ்ந்த அந்த முக்கியமான நேரத்தில் மனிதர்களால் கைவிடப்படு தலும், ஓர் அரசனின் கொலை வெறியும், பரதேச வாழ்வும், கடும் உழைப்பின் சோர்வும் எந்த விதத் திலும் தேவ திருச்சித்தத்திற்குக் கீழ்ப்படிவதிலிருந்து அவரைத் தடுத்து விடவில்லை. இவ்வாறு, அவர் கடவுளின் உண்மையான மகனாக, அவருக்குரிய மகிமையையும், கீழ்ப்படிதலையும், நேசத்தையும் அவருக்குத் தந்து, இவ்வாறு அவரால் நீதிமான் என்று அழைக்கப்படத் தகுதி பெற்றார்.

உண்மையில், நீதி என்பது எல்லாப் புண்ணியங்களுடையவும் தொகுப்பாக இருக்கிறது. ஒரே ஒரு புண்ணியத்தில் குறைவுள்ளவனும் கூட, முழுமையான நீதிமான் என்று அழைக்கப்பட முடியாது. ஆகையால், திவ்ய கன்னிகைக்குப் பிறகு, அர்ச். சூசையப்பர் சகல புண்ணியங்களுக்கும் நன்மாதிரிகையாக இருக்கிறார் என்பதும் நிரூபிக்கப்படுகிறது.

"பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா சர்வ நீதிபரராயிருப்பது போல, நீங்களும் நீதிமான்களா யிருங்கள்!" அர்ச். சூசையப்பர் சர்வேசுரனுடைய நீதியில் முழுமையாகப் பங்கடைந்தார். அவருடைய மன்றாட்டின் உதவியோடு, நாமும் நீதியில் சிறந்து விளங்கத் தேவையான வரப் பிரசாதத்தை நமக்குத் தந்தருளும்படி சர்வேசுரனை மன்றாடுவோமாக.

திருநாள்: மார்ச் 19. மரியாயே வாழ்க!

மனந்திரும்பத் தேவையான மூன்று காரியங்கள்!

நகைகளும், தங்க நாணயங்களும் உள்ள இருப்புப் பெட்டியைத் திறக்க மூன்று வித்தியாசமுள்ள திறவுகோல்கள் மூன்று பேர் கைகளில் இருக்கின்றன என்று வைத்துக்கொள். மூன்று பேரும் பெட்டி இருக்குமிடத்தில் ஒரே நேரத்தில் ஒன்றுகூடினால் மட்டுமே பெட்டியைத் திறக்கலாம். அதே போல, சர்வேசுரனிடம் மனந்திரும்ப மூன்று காரியங்கள் ஒன்றுகூட வேண்டும். ஒன்று குறைந்தாலும் மனந்திரும்புவது முடியாத காரியம். நீ மனந்திரும்ப **நேரம்** இல்லாவிடில், அல்லது நேரமிருந்தாலும், **தேவ உதவி** இல்லாவிடில், அல்லது, தேவ உதவி இருந்தாலும் உனக்கு **விருப்பம்** இல்லாவிடில், நீ மனந்திரும்ப முடியாது. மேலும், இம்மூன்று காரியங்களும் உன் கையில் இல்லாததால், இவற்றை உன் இஷ்டம்போல் எப்போதும் சேர்த்துப் பயன்படுத்த உன்னால் முடியாது... மூன்றும் ஒன்றாகச் சேர்ந்து கிடைக்கும்போது, எந்தக் காரணத் திற்காகவும் அந்த நேரத்தை அலட்சியம் செய்து விடாதே. ஒருவேளை அந்த நேரம் மீண்டும் உனக்குக் கிடைக்காமல் போகலாம். **மன்னிப்புத் தருவதாக வாக்குத் தந்த சர்வேசுரன் அந்த மன்னிப்பை இன்னொரு முறை கேட்பதற்கு நேரம் தருவதாக ஓரிடத்திலும் சொல்லவில்லையே!** நீ மனந்திரும்ப உனக்கு உரியது நிகழ்காலம் மட்டும்தான். இன்று, இந்த நிமிடம்தான் உனக்குச் சொந்தம். ஆதலால் இன்றே, இக்கணமே மனந்திரும்பி ஆண்டவரிடம் திரும்பி வா!

(முன்ரேசா புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது. பக்கம் 45).

மாதாவின் சூசை அச்சக புத்தக டிப்போவில் கிடைக்கும் ஞானப் புத்தகங்கள்

Cell: 94876 09983 **Landline: 0461 2361989**

		விலை ரூ.	தபாலில் விலை ரூ.
1	பாரம்பரிய திருக்குடும்ப பக்திமாலை	220.00	
2	உலகின் இறுதிக் காலங்கள்	125.00	
3	திருப்பாடுகளின் வரலாறு	150.00	
4	அனுதின ஜெபப் புத்தகம்	50.00	
5	திருப்பாடுகளின் தியானம்	90.00	
6	அறிவோம் பத்துக் கட்டளைகள்	100.00	
7	மலைமேல் பிரசங்கம்	65.00	
8	அறிவோம் அப்போஸ்தலர்களை: அர்ச். பிலவேந்திரர்	90.00	
9	ஞான உபதேசக் கோர்வை (3 பாகங்கள் அடங்கியது)	325.00	
10	மன்ரேசா (அர்ச். இஞ்ஞாசியாரின் தியானப் பிரசங்கங்களின் தொகுப்பு	125.00	
11	கிறீஸ்துநாதர் அநுசாரம்	250.00	
12	மரியாயின் மீது உண்மை பக்தி	125.00	
13	பாத்திமா காட்சிகள்	100.00	
14	பாவசங்கீர்த்தனத்தின் இரகசியம்	60.00	
15	சேசுவின் திருநாமத்தின் அதிசயங்கள்	35.00	
16	கற்பு என் பொக்கிஷம்	60.00	
17	என்னைப்படி அல்லது வருத்தப்படு (உத்தரிக்கிற ஆன்மாக்கள் பற்றியது)	30.00	
18	ஞான உணர்த்துதல்	40.00	
19	Read Me or Rue It	60.00	
20	என்னைப் படிக்காவிட்டால் வருத்தப்படுவாய்	80.00	
21	கத்தோலிக்க வேத சத்தியங்கள்	45.00	
22	இதுதான் பாத்திமா செய்தி, இதுவே பரிகார பக்தி	35.00	
23	ஞான சரீரம்	35.00	
24	சலேத் இரகசியம்	35.00	
25	மரியாயின் இரகசியம்	30.00	
26	தேவ இரகசிய ரோஜா மாதா காட்சிகள்	30.00	
27	The Penny Catechism	35.00	
28	அமலோற்பவ மாமரியின் போரணி	40.00	
29	அன்னையை நேசிக்கப் பன்னிரு படிகள்	30.00	
30	மரியாயின் மாசற்ற இருதய பரிகார பக்தி முயற்சிகள்		
31	முத்துக்குளித் துறையின் முதல் ஆயர் (வந். ரோச் ஆண்டகையின் வரலாறு)	30.00	
32	மோட்சம், நரகம், உத்தரிக்கிற ஸ்தலம்	35.00	
33	வியாகுல மாதா பக்தி	35.00	
34	தலை வெள்ளி, முதல் சனி பக்தியும், ஜெபமாலையும் அனுசரிக்கும் முறை	20.00	
35	உத்தரிக்கிற ஸ்தலத்துக்கு அனுதின யாத்திரை		
36	காவல் சம்மனசானவர்	10.00	
37	சிலுவைப் பாதை	15.00	
38	பரிசுத்த ஆவி ஜெபம்	6.00	
39	சேசுவின் திரு இருதய மந்திரமாலை	6.00	
40	தேவமாதாவின் மந்திரமாலை	10.00	
41	அர்ச். சூசையப்பர் பக்தி மாலை	10.00	
42	அர்ச். சூசையப்பர் மகத்துவங்கள்	60.00	
43	ஆதித் திருச்சபையின் பத்து வேத கலாபனைகள்	10.00	
44	திருச்சபையின் கட்டளைகள் (சிறிய விளக்கத்துடன்)	10.00	
45	சேசுவின் இரக்க பக்தி	10.00	
46	அர்ச். பிலோமினம்மாள் ஜெபப் புத்தகம்	10.00	
47	தேவ அழைத்தல்கள்	35.00	
48	சின்னக் குறிப்பிடம்	10.00	

		விலை ரூ.	தபாலில் விலை ரூ.
49	அன்பிரவு (பரிகாரத் திருமணி ஜெபப் புத்தகம்	25.00	
50	மனச் செபம் ஒரு விளக்கம்	35.00	
51	புதுநன்மைப் புனிதை (முத்திப்பேறு பெற்ற இமெல்டா வரலாறு)	70.00	
52	பரலோக எச்சரிப்பு (2 புத்தகங்களின் தொகுப்பு -Fr. அந்தோனி சேவியர் தொகுத்து எழுதியது	60.00	
53	ஜெபமாலையின் இரகசியம் (அர்ச். லூயிஸ் மோன்போர்ட் எழுதியது)	100.00	
54	மரியாயின் மாசற்ற இருதய வெற்றியின் உதயம்	35.00	
55	33 நாள் தயாரிப்பு: மாதாவுக்கு முழு அர்ப்பணம் செய்யும் முறை (தியானங்களுடன்)	70.00	
56	இறுதிக் கால யுகம்	100.00	
57	அர்ச். பத்தாம் பத்திநாதர் வாழ்க்கை வரலாறு	100.00	
58	புதுமைப் புனிதர் தந்தை பியோ	200.00	
59	வேத விளக்கம் (வீரமாமுனிவர் (சங்.ஜோசப் பெஸ்கி, சே.ச.) எழுதியது	150.00	
60	அன்பின் அரசர்	150.00	
61	நரகம்	60.00	
62	அர்ச். ரீத்தம்மாளின் ஜீவிய சரித்திரம்	12.00	
63	தேவமாதாவின் பிரார்த்தனை விளக்கம்	150.00	
64	மரியாயின் மகிமைகள்	170.00	
65	புதிய நட்சத்திரம் பிலோமினா	60.00	
66	அர்ச். பாஸி மரிய மதலேனாள்	85.00	
67	அர்ச். ஜெர்த்ரூத்தம்மாள்	45.00	
68	ஜெபமாலை ஜெபிப்பது எப்படி?	10.00	
69	A Brief History of St. Mary Magdalene de Pazzi, Carmelite and Mystic	50.00	
70.	புனித தெரேசம்மாள் சரித்திரம்	160.00	
71	கடவுள் மனிதனின் காவியம் (முதல் பாகம்)	350.00	
72	கடவுள் மனிதனின் காவியம் (இரண்டாம் பாகம்)	350.00	
73	கடவுள் மனிதனின் காவியம் (மூன்றாம் பாகம்)	550.00	
74	கடவுள் மனிதனின் காவியம் (நான்காம் பாகம்)	200.00	
75	கடவுள் மனிதனின் காவியம் (ஐந்தாம் பாகம்)	350.00	
76	கடவுள் மனிதனின் காவியம் (ஆறாம் பாகம்)	350.00	
77	கடவுள் மனிதனின் காவியம் (ஏழாம் பாகம்)	550.00	
78	கடவுள் மனிதனின் காவியம் (எட்டாம் பாகம்)	550.00	
79+	கடவுள் மனிதனின் காவியம் (ஒன்பதாம் பாகம்)	550.00	
80	கடவுள் மனிதனின் காவியம் (பத்தாம் பாகம்)	550.00	

அன்பான வாசகர்களின் கவனத்திற்கு

1. மணியார்டர் பாரத்தில் உங்கள் தொலைபேசி/அலைபேசி எண்ணைக் குறிப்பிடுங்கள்.
2. மாதா பரிகார மலரை உங்களுக்குத் தெரிந்தவர்கள், உறவினர்கள், நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தி, பரப்ப உதவுங்கள். எங்களுக்கு உதவி செய்கிற உங்கள் அனைவரின் ஆன்ம சரீர நலன்களுக்காகவும் தினமும் எங்கள் ஜெபத்தில் வேண்டுகிறோம்.
3. மாதா பரிகார மலர் ஆண்டு சந்தாவை இன்னும் புதுப்பிக்காதவர்கள் உடனே அதைப் புதுப்பித்து, நம் பத்திரிகை நல்ல முறையில் வெளிவர எங்களுக்கு உதவும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். வருட சந்தா ரூ. 150/- கூடுதல் தபால் செலவு ஆகிறது. நேயர்கள் உதவி செய்யும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.
4. மாதா பரிகார மலர் சந்தா, காணிக்கை மற்றும் புத்தகங்களுக்கு மட்டும் கீழ்க்கண்ட பெயரில் நீங்கள் மணியார்டர்கள், D.Ds மற்றும் காசோலைகளை அனுப்புங்கள்.

A/c Name: SOCIETY OF APOSTLES OF MARY
No. 31423199505 - IFS Code: SBIN 0008145
State Bank of India, Kanthasamypuram Branch, Tuticorin.

அனுப்ப வேண்டிய முகவரி

மாதா அப்போஸ்தலர்கள் சபை, ரோஸா மிஸ்திக்கா,
11/519 சகாயமாதா பட்டணம், 2-வது தெரு, வி.வி.டி. பள்ளி எதிரில், தூத்துக்குடி - 628 002.
போன் : 0461 2361989, அலைபேசி: 94876 09983. Email: tutirosamystica@gmail.com
சந்தா நன்கொடை செலுத்த: Google Pay: 94876 09983.

நமது மாதா அப்போஸ்தலர்கள் சபைக்கு அனுப்பும் நன்கொடை மற்றும் காணிக்கைக்கு வரிச் சலுகை பெற்றுக்கொள்ள ரசீது (80G - AAJTS6976JF20215) பெற்றுக்கொள்ள முடியும்.

சேசு மரியாயில் அன்புள்ள நண்பர்களே, உபகாரிகளே,

நமது உலக ஜெயராக்கினி மாதா ஆலய கட்டட வேலைகள் கடந்த ஆறு ஆண்டுகளாக நடந்து வருகின்றன. சேசுவின் திரு இருதயத்திற்கும் (திவ்ய நற்கருணைக்கும்), மேலும், தேவ மாதா பாத்திமாவில் கேட்டுக்கொண்டபடி மரியாயின் மாசற்ற இருதய பரிகார பக்திக்கென்றும் இந்த ஆலயத்தை மிகுந்த முயற்சியுடன், உபகாரிகளின் உதவியினால் கட்டி வருகிறோம். தேவையான உதவிகள் கிடைக்காமையால் இக்கட்டட வேலைகள் இன்னும் முடியவில்லை. நமது உலக ஜெயராக்கினி மாதா ஆலயத்தை முழுமையாகக் கட்டி முடிக்க கீழ்க்கண்ட வகைகள் தேவைப்படுகின்றன:

01.	ரூஃப் (Roof) & கான்கிரீட் & சென்டரிங் கூலி	ரூ. 30,00,000.00
02.	பீடத்தின் மேல் (Center) டவர் கான்கிரீட் & சென்டரிங் கூலி	ரூ. 9,00,000.00
03	ஆலயத்தின் உள்பக்கம் & வெளிப்பக்கம் பூசுவதற்கு பொருட்கள் (Finishing materials) & கூலி	ரூ. 10,00,000.00
04.	ரூஃப் மேல் பக்கம் & உள்பக்கம் பூசுவதற்குப் பொருட்கள் (Finishing materials) & லேபர் கூலி	ரூ. 12,50,000.00
05.	கூரை ஓடு பதிக்கப் பொருட்கள் & லேபர் கூலி	ரூ. 7,00,000.00
06.	ஆலயத்தின் முன் கோபுரம் (Front Tower) கட்டுவதற்கு பொருட்கள் (Finishing materials) & லேபர் கூலி	ரூ. 7,50,000.00
07.	குருக்கள் தங்கும் இல்லத்திற்கு உள்பக்கம், வெளிப்பக்கம் பூசுவதற்கு பொருட்கள் (Finishing materials) & லேபர் கூலி	ரூ. 1, 05,000.00
08.	தேக்கு மரம் நிலை & கதவு 9, ஜன்னல் 14, லேபர் & வுட் பாலிஷ்	ரூ. 17,50,000.00
09.	தரைக்கு வெள்ளை மார்பிள் கல் & லேபர் கூலி	ரூ. 24,00,000.00
10.	எலெக்ட்ரிக்கல் சாமான்கள், (Fittings)விளக்குகள் & லேபர் கூலி	ரூ. 6,00,000.00
11.	ஆலயம் முழுவதற்கும் வர்ணம் பூச பொருட்கள் & லேபர் கூலி	ரூ. 12,00,000.00
12.	கண்ணாடி ஓவியங்கள் வேலை	ரூ. 9,00,000.00
13.	திவ்ய பலிபூசை நிறைவேற்ற முக்கிய பீடம் (தேக்கு மர வேலை)	ரூ. 9,25,000.00
14.	பீடத்தின் இரு புறமும் (Altar Sides) தேக்கு மர வேலை	ரூ. 7,00,000.00
	ஆலயம் கட்டி முடிக்கத் தேவையான மொத்தத் தொகை	ரூ.1,61,80,000.00

இந்த ஆலயத்தைக் கட்டி முடிக்க மாதாவின் அன்புப் பிள்ளைகள் தங்களால் முடிந்த உதவி அளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வங்கி விபரம்:

A/c Name : Society of Apostles of Mary
A/c No. : 1218000000473
IFS Code : IOBA0001218
Indian Overseas Bank,
Mappillaiyurani Branch,
Thoothukudi.
For Tax exemption: 80G - AAJTS6976JF20215

இவண்,
மாதா அப்போஸ்தலர்கள் சபை மற்றும்
மாதா அப்போஸ்தலர்கள்
முகவரி:
மாதா அப்போஸ்தலர்கள் சபை,
11 / 519, சகாயமாதா பட்டணம், 2-வது தெரு,
தூத்துக்குடி - 628 002. போன்: 0461 2361989
அலைபேசி: 94876 09983 / 94872 57479
Email: tutirosamystica@gmail.com

உலக ஜெயராக்கினி மாதா ஆலயம்

ஆலயத்தின் முழுத்தோற்றம்

கட்டிடப் பணி நடைபெறும் ஆலயத்தின் தோற்றம்

முகவரி

மாதா அப்போஸ்தலர்கள் சபை,

(Society of Apostles of Mary)

11/519, சகாயமாதாபட்டணம்,

2வது தெரு, தூத்துக்குடி – 628 002.

தொலைபேசி: 0461 2361989

அலைபேசி: 94876 09983, 94872 57479

E-mail: tutirosamystica@gmail.com

வங்கி விபரம்

Account Name:
Society of Apostles of Mary
Account No. 121802000000473
IFS Code: IOBA0001218
Indian Overseas Bank,
Mappillaiyurani Branch,
Thoothukudi.

மார்ச் – ஏப்ரல் மாதங்களின் முதல் சனி பக்தி முயற்சியின் பரிகாரக் கருத்துக்கள்

மார்ச்: தேவமாதா நித்திய கன்னிகை என்ற சத்தியத்தை மறுக்கும் நிந்தைக்குப் பரிகாரமாக ...

ஏப்ரல்: தேவமாதாவினுடைய பக்தியை இளம் உள்ளங்களிலிருந்து அகற்றுகின்ற துரோகத்துக்குப் பரிகாரமாக ...

மாதா பரிகார மலரில் விசுவாசத்திற்கோ, நல்லொழுக்கத்திற்கோ, கத்தோலிக்க திருச்சபைக்கோ அதன் போதனைகளுக்கோ உண்மையான பக்திக்கோ மாறுபாடான எந்தக் கருத்தும் வெளிவராது.

– மாதா பரிகார மலர் குழு

MATHA PARIKARA MALAR
ROSA MYSTICA
(Opp. V.V.D. H. Sec. School)
SAHAYAMATHAPATTANAM
TUTICORIN - 628 002.
PH: 0461 - 2361989
Cell: 94876 09983
E-mail: tutirosamystica@gmail.com

மாதா பரிகார மலர்
ரோஸா மிஸ்திக்கா
வி.வி.டி. மேல்நிலைப்பள்ளி எதிரில்,
சகாயமாதாபட்டணம்
தூத்துக்குடி மேலூர் போஸ்ட் – 628 002
போன்: 0461 – 2361989
அலைபேசி: 94876 09983

To

Printed, Published and owned by: S. Michael Joseph Kennedy , Managing Trustee cum Secretary of Society of Apostles of Mary & Keeper of Mathavin Susai Achagam (Printing Press), 11/519, 2nd Street, Sahayamathapattanam, Melur (P.o), Tuticorin District, Tamil Nadu.

Printed at: Mathavin Susai Achagam (Printing Press), C/o, Society of Apostles of Mary, D.No 11/510, 2nd Street, Sahayamathapattanam, Melur (P.o), Tuticorin - 628 002. Tuticorin Dist., Tamil Nadu.

Published at: Society of Apostles of Mary, 11/510-1, Rosamystica 2nd Street, Sahayamathapattanam, Melur (P.o), Tuticorin - 628 002. Tuticorin Dist., Tamil Nadu.

Editor: Sammanasu Navis, C/o, Society of Apostles of Mary, 11/519, 2nd Street, Sahayamathapattanam, Melur (P.o), Tuticorin - 628 002. Tuticorin Dist., Tamilnadu.